# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 01 ஞாயிற்றுக்கிழமை (17-09-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:226


# ஹெலி விபத்தில் அஷ்ரப் மரணம்!



## அவருடன் 14 பேர் கருகி மாண்டனர்

கொழும்பு,செப்ரெம்பர்17

**நேற்றுக் காலை கேகாலை மாவட்டத்தில் உள்ள அரனாயக்கா பகுதியில் - சிறிய குன்றுப் பிரதேசத்தில் - இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் விபத்தில் துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பும் (வயது 52) மற்றும் பதின்னான்கு பேரும் கருகி மாண்டனர்.**

தேர்தல் பிரசாரத்துக்காக நேற்றுக் காலை 9.05மணிக்கு எம்.ஐ.17 ரக ஹெலிக்கொப்டரில் கொழும்பிலிருந்து அம்பாறை நோக்கிப் புறப்பட்ட அமைச்சர் அஷ்ரப்பும் அவரது அணியினரும் காலை 9.30 மணியளவில் கேகாலை மாவட்டம் முறக்கந்தப் பகுதியில் உள்ள அரனாயக்கா என்ற இடத்துக்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த சமயம் ஏற்பட்ட விபத்தில் கூண்டோடு உயிரிழந்தனர்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## மிகக் குறுகிய காலத்தில் அரசியல் வானில் பிரகாசித்தவர்

1948ஆம் ஆண்டு கிழக்கு சம்மாந்துறையில் பிறந்த எம்.எச்.எம். அஷ்ரப் தமது ஆரம்பக் கல்வியை கல்முனையில் ஸ்ரீ ஆண்கள் கல்லூரியிலும் பின்னர் கல்முனை வெஸ்லிக் கல்லூரியிலும் பெற்றார்.

1970 இல் சட்டக் கல்லூரியில் நுழைந்த அவர் முதலாம், இரண்டாம் ஆண்டுப் பரீட்சைகளில் முதல் தர சித்திகளையும் அதன் மூலம் விசேட புலமைப் பரிசில் தகுதிகளையும் பெற்றுக் கொண்டார்.

1974 இல் சட்டத்தரணியாகச் சத்தியப்பிரமாணம் செய்த அவர் 1975 முதல் சிறிது காலம் அரச சட்டத்தரணியாகப் பணியாற்றினார்.

சட்டக் கல்லூரியில் அரசமைப்புச் சட்ட அறிவுக்கான பரிசைப் பெற்ற அவர், 1977 அரசமைப்புப் பற்றிய விசேட குறிப்புகள் அடங்கிய - அரசமைப்புச் சட்ட நூல் - ஒன்றைத் தமிழில் எழுதினார்.

1977 இல் முஸ்லிம் ஐக்கிய முன்னணி ஸ்தாபிக்கப்பட்டபோது அதன் ஸ்தாபகர்களுள் ஒருவராக விளங்கிய அஷ்ரப், அதன் சட்ட ஆலோசகராகவும், கொள்கை வகுப்பாளராகவும் விளங்கினார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்துக் குறித்து விசாரிக்கக் குழு!

கொழும்பு,செப்.17

அமைச்சர் அஷ்ரப் மற்றும் பதின்னான்கு பேரின் உயிரைக் காவு கொண்ட ஹெலிக்கொப்டர் விபத்துக் குறித்து ஆராய உயர்மட்டக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாகவும் -

அக்குழு தனது பணியை உடனடியாக ஆரம்பித்துள்ளதாகவும் -

கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்துப் பற்றிய தகவல் கிடைத்ததும் விமானப் படைத்தளபதி ஏயர் வைஸ்மார்ஷல் ஜயலத் ஜெயக்கொடி உடனடியாகச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விசேட மீட்புப் பணி அணிகளை அனுப்பி வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## நேற்று நள்ளிரவே ஜனாஸா நல்லடக்கம்

### ஜனாதிபதி உட்பட பலர் அஞ்சலி

கொழும்பு,செப்.17

அமைச்சர் அஷ்ரப்பின் ஜனாஸா முஸ்லிம் சமயமரபுப்படி நேற்று நள்ளிரவு அடக்கம் செய்யப்பட்டது.

கொழும்பு ஜாவத்தை முஸ்லிம் மையவாடியில் முழு அரச மரியாதைகளுடன் இறுதிச் சடங்குகள் இடம்பெற்றன.

முன்னதாக அமைச்சரின் கருகிய பூதவுடல் நேற்றிரவு 11மணி வரை அவரது கொழும்பு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மிகக் குறுகிய நேரத்துக்குள்ளாகவே பல்லாயிரக்கணக்கான மக்கள் அஷ்ரப்பின் ஜனாஸாவுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அங்கு திரண்டனர். நள்ளிரவு வரை நீண்ட வரிசையில் நின்று மக்கள் அவருக்குத் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். அஞ்சலி செலுத்த வந்த பலரும் கதறி அழுததைக் காண முடிந்தது. முன்னதாக அமைச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் சிக்குவதற்குச் சற்றுமுன்னர் அரசுக்கு எதிராக அஷ்ரப் அறிக்கை?

கொழும்பு,செப்.17

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் எந்த உறவையும் வைத்துக் கொள்ளப்போவதில்லை எனத் தெரிவிக்கும் காரசாரமான அறிக்கை ஒன்றை அமைச்சர் அஷ்ரப் ஹெலி விபத்தில் சிக்கி இறப்பதற்கு சற்று முன்னர் வெளியிட்டாரா?

கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நேற்று இந்த விடயம் பரபரப்பாகப் பேசப்பட்டது.

ஹெலிக்கொப்டரில் புறப்படுவதற்கு முன் அமைச்சர் இத்தகைய அறிக்கை ஒன்றை வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் அந்த அறிக்கை குறித்த உத்தியோகபூர்வமான தகவல் எதனையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு பெற முடியவில்லை என்று செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சர் பௌஸி-அஷ்ரப் பிணக்கைத் தொடர்ந்து ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ"க்கும் இடையிலான உறவு பெருமளவில் விரிசல் கண்டிருப்பது தெரிந்ததே. அமைச்சர் பௌசி அங்கம் வகிக்கும் அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அமைச்சர் அஷ்ரப் கடந்த சில தினங்களுக்கு முன் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## ஐந்து விமானப்படையினரும் இரு செய்தியாளரும் பலி!

கொழும்பு,செப்17

அமைச்சர் அஷ்ரப்போடு ஹெலிக்கொப்டரில் உயிரிழந்தவர்களில் விமானி உட்பட ஐவர் விமானப்படையைச் சேர்ந்தவர்களாவர்.

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகரும் தற்போது அமைச்சர் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் அம்பாறை (திகாமடுல்ல) தேர்தல் மாவட்டத்தில் ஒரு வேட்பாளராகப் போட்டியிடுபவருமான எஸ்.கதிர்காமத்தம்பி, 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்தின் மருதமுனைச் செய்தியாளர் ஏ.எம்.நிஹமதுல்லா, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் மருதமுனைச் செய்தியாளர் ரசியூதீன், அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர்களான பிரதம பொலீஸ் இன்ஸ்பெக்டர் விதான கமகே, பொலீஸ் கான்ஸ்டபிள் பாருக், இளைப்பாறிய பொலீஸ் கான்ஸ்டபிள் சந்திரா சில்வா, மெய்ப்பாதுகாவலர் அஜித் ஆகியோரும் இந்த விபத்தில் உயிரிழந்தனர்.

ஹெலிக்கொப்டரில் அச்சமயம் பயணம் செய்த எவரும் விபத்தில் உயிர்பிழைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## ஷெல்லினால் மாணவி காயம்

யாழ்ப்பாணம்,செப்.17

சுண்டிக்குளி, மத்தியூஸ் வீதிப் பகுதிகளில் நேற்றுக் காலை 7 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததால் இப்பகுதிகளில் பதற்ற நிலை ஏற்பட்டது. ஷெல் சிதறல்களினால் இளம் பெண் காலில் காயமடைந்தார்.

கொழும்புத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து மத்தியூஸ் வீதிப் பகுதியில் தங்கியிருந்த யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவியான சபாபதி சர்மிலி என்பவரே ஷெல் சிதறலினால் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். (ஐ-9-15-51-173)

## கூட்டணி அனுதாபம்

யாழ்ப்பாணம்,செப்.17

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின திடீர்மறைவு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் வெளியிட்டுள்ளது. எதிர்பாராத இந்த அனர்த்தத்தில் பலியான அமைச்சரினதும் ஏனையோரினதும் குடும்பத்தவர்களுக்கு கூட்டணி உயர்பீடம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதாக கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். (ஐ)

## முஸ்லிம் பிரதேசங்கள் சோகத்தில் ஆழ்ந்தன!

அம்பாறை,செப்.17

அமைச்சர் அஷ்ரப்பின் திடீர் மரணத்தை அடுத்து கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்கள் சோகத்தில் ஆழ்ந்தன.

அஷ்ரப் விபத்தில் உயிரிழந்த செய்தி நேற்று முற்பகல் வெளியானதும் முஸ்லிம் பிரதேச மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தவர்களாகக் காணப்பட்டனர்.

மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி, திருகோணமலை, கிண்ணியா, கல்முனை, அக்கரைப்பற்று, சம்மாந்துறை உட்பட அம்பாறை கரையோரப் பிரதேசங்களும் சோகமயமாகக் காணப்பட்டன. எங்கும் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. கடைகளும், சந்தைகளும் இழுத்து மூடப்பட்டன. முஸ்லிம் மக்கள் ஆங்காங்கே கூடி நின்று துயரைப் பகிர்ந்து கொள்வதைக் காண முடிந்தது. பல இடங்களில் வீடுகளில் அழுகுரல்கள் கேட்டன.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களி

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப்பின் இடம் ரவூப் ஹக்கீமுக்கு?

கொழும்பு,செப்.17

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் அஷ்ரப்பின் இடத்துக்குப் புதிய தலைவர் ஒருவரை அக்கட்சியின் அரசியல் குழு விரைவில் கூடி தெரிவு செய்யும் என்று அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

அக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவரான ரவூப் ஹக்கீம் பெரும்பாலும் புதிய தலைவராக நியமிக்கப்படக்கூடும் என்று அக் கட்சியின் உயர் வட்டாரங்கள் சில தெரிவித்தன.

அக்கட்சியின் மற்றொரு பிரமுகரும் பிரதி அமைச்சருமான ஹிஸ்புல்லாவுக்கு கிழக்கு மாகாண முஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

## குமார் நினைவு முத்திரை நேற்று கனடாவில் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.17

அமரர் குமார் பொன்னம்பலத்தின் ஞாபகார்த்தமாக கனேடிய தபால் கூட்டுத்தாபனத்தினால் நேற்று கனடாவில் நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.

கனடாவில் "தமிழன் வழி காட்டி" என்னும் விளம்பரத் தொகுப்பினை வெளியிடும் ஆதவன் வெளியீட்டாளர்களின் ஏற்பாட்டில் இந்த நினைவு முத்திரை வெளியிடப்பட்டது.

முத்திரை வெளியிடப்பட்ட முதல் நாளன்றே 6 ஆயிரம் டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முத்திரையை அஞ்சல் உபயோகத்துக்கு கனடாவில்

(14ஆம் பக்கம் பார்க்க)

யாழ். நகர் மைய றோட்டரக்ட் கழகம்
நடத்தும்
க.பொ.த. (உ/த) மாணவர்களுக்கான

**செயற்திட்டங்களை உருவாக்கலும் நடைமுறைப்படுத்தலும்**

மேற்படி கருத்தரங்கு இன்று (18-09-2K) பி.ப.2.30 (பு.நே.) மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும்.

பிரவேசம் - 20 ரூபா (C/12962)

பேராசான், இலக்கணவித்தகர்

## இ.நமசிவாய தேசிகருக்கு

# அஞ்சலி



தமிழகத்தில் காலமான மஹாவித்துவான்

## இ.நமசிவாய தேசிகருக்கு

**எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.**

அன்னாரின் ஆத்மா அவர் வழிபட்ட வருத்தலைவிளான் மருதடி விநாயகர் திருவடி நிழலில் ஆறுதல் அடைவதாக!

* பாலர் ஞானோதய சங்கம்
* பாலர் ஞானோதய சனசமூக நிலையம்
* பாலர் ஞானோதய கலை உடல் வளர்ச்சிக்கழகம்
* இடம்பெயர்ந்தோர் சங்கம்
* கிராம அபிவிருத்திச் சங்கம்
* மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
* அந்திய காலச் சகாய நிதிச் சங்கம்

*– கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வருத்தலை விளான்.*

(78488)

# நீங்கா நினைவலைகள்

**31ஆம் நாள் நினைவஞ்சலி** | **7ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**சங்கரப்பிள்ளை முருகேசு**
(விவாக, பிறப்பு, இறப்புப் பதிவாளர், வடமராட்சி, கட்டைவேலி)
மலர்வு : 23-07-1940
உதிர்வு : 18-08-2000



அமரர்
**முருகேசு பகீரதன்**
மலர்வு :- 27-12-1972
உதிர்வு :- 17-09-1993

எமது குடும்பத் தலைவர் அமரர் ச.முருகேசு அவர்கள் 18-08-2000 அன்று சிவபதம் அடைந்த செய்தி கேள்வியுற்று உடனே ஓடி வந்து உதவிய உறவினர்களுக்கும், அயலவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் வழங்கிய நண்பர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எம் நன்றியினை நவில்தலுடன்,

இன்று (17-09-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இளைய மகன் பகீரதனது ஏழாண்டு நினைவு தினத்தில் தந்தைக்கு நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி முருகேசு (மனைவி, தாய்),
மற்றும்
பிள்ளைகள், சகோதரர்கள்.

*தம்பசிட்டி, பருத்தித்துறை.*

(C/12957)

## மாட்டுவண்டிப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.17

பொன்னாலைக் குளம் சவாரித்திடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நடைபெறவுள்ளது. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் சவாரி மாடுகள் போட்டியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

(இ-ரி-99)


# ராஜா
(யாழ்ப்பாணம்)
இன்று மட்டும்
கார்த்திக், கௌசல்யா
மற்றும் பலரின் நடிப்பில்
## பூவேலி
காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே)
ரசிகர்களே! நாளை முதல்
இனிய பாடல்கள் நிறைந்த
சுவாரஸ்யமான காதல் காவியம்
**உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்**
(C/12920)

# நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜய், சிம்ரன்,
**மணிவண்ணன்** நடிப்பில்
இனிய பாடல்கள் நிறைந்த
உள்ளம் கொள்ளை
கொள்ளும் பல்சுவை
ததும்பிய காதல் காவியம்
**துள்ளாத மனமும் துள்ளும்**
(78444)
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## தியாகராஜா ஆனந்தராஜாரூபன்
## (கண்ணன்)

கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா ஆனந்தராஜாரூபன் - கண்ணன் 12.09.2000 அன்று பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா - பராசக்தி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சுமதியின் அன்புக் கணவரும், சாகீத்தியனின் பாசமிகு தந்தையும், ஜெயா (கனடா), பவா (கனடா), சுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
K.தியாகராஜா (மாமன்)
Rasam Transport
உரிமையாளர்

*23, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

(78493)

## திருமதி சிவசுப்பிரமணியம் மரகதமணி

மன்னாரைப் பிறப்பிடமாகவும், குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும், நோர்வேயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் மரகதமணி நோர்வேயில் காலமானார்.

இவர் பொன்னம்பலம் சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், மங்கையர்க்கரசி (டென்மார்க்), ரவீந்திரன் (லண்டன்), ஜெயச்சந்திரன் (சுவிஸ்), மங்களேஸ்வரி (லண்டன்), சிவச்சந்திரன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராஜா (டென்மார்க்), மாலினி (லண்டன்), இந்திரா (சுவிஸ்), அருந்தவராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நியூசன் (டென்மார்க்), ஜெசினி (டென்மார்க்), விதுர்ஜன் (லண்டன்), சுவீர்தன் (சுவிஸ்), சுவீர்ஜா (சுவிஸ்), அனுசியா (லண்டன்), அஜிந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (நோர்வேயில்) 18-09-2000 திங்கட்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ.குணலிங்கம்.
(மச்சான்)

*'நளினி மஹால்', குப்பிளான் தெற்கு, ஏழாலை.*

(C/12963)


# வேண்டாம் வன்முறை

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி)

ஜனநாயகத்தை காக்க வன்முறைக்கெதிராக வாக்களியுங்கள்

(C/12964)

# நடிகர் ராஜ்குமார் கடத்தல் விடுதலைப் புலிகளின் நாடகமாம்!

## சுப்பிரமணிய சுவாமி கூறுகிறார்


சுப்பிரமணிய சுவாமி

திருச்சி,செப்.17

கன்னட நடிகர் ராஜ்குமாரைச் சந்தனமரக் கடத்தல் காரன் வீரப்பன் கடத்தியிருப்பது விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் நடத்தப்படும் நாடகம் என்று ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காக திருச்சி வந்த அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் இப்படிக் கூறினார்.கடத்தப்பட்ட நால்வரையும் விடுவிக்கப் படைகளைக் காட்டுக்குள் அனுப்புவது உட்பட தேவையான நடவடிக்கைகளை தாமதிக்காமல் மேற்கொள்ளும்படி தமிழக, கர்நாடக முதல்வர்களுக்கு யோசனை கூறிய சுப்பிரமணிய சுவாமி அப்போதுதான் கடத்தப்பட்டவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என்று தெரிவித்தார். (ஒ)

# புலிகளின் ஆயுதப்போராட்டத்துக்கு ம.தி.மு.க. என்றும் ஆதரவு வழங்கும்!

## வை.கோபாலசாமி உறுதி!!


வை.கோ

மதுரை,செப்,17

இலங்கையில் தமிழர்களுக்காகத் தனிநாடு கோரிப் போராடிவரும் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்றும் ஆதரவு வழங்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி உறுதி தெரிவித்தார்.

மதுரையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைத் கூறினார்.

இலங்கையில் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர ஒப்புக்கொண்ட அனைத்து நிபந்தனைகள் மற்றும் யோசனைகளை சிங்களத் தரப்புக் காலங்காலமாக மீறி வந்ததாகக் குற்றஞ்சாட்டிய வை.கோபாலசாமி -

தமிழர்களுக்கு உரிய உரிமைகளை வழங்கச் சிங்களத் தரப்பினர் மறுத்து வருவதால்தான் விடுதலைப் புலிகள் ஆயுதமேந்திப் போராட வேண்டி இருப்பதாகவும் கூறினார். (ஒ)

## அண்டை நாடுகளை மிரட்டினால்

# இராணுவத் தாக்குதல் நடத்தப்படுமென ஈராக்கிற்கு அமெரிக்கா எச்சரிக்கை!

வாஷிங்ரன்,செப்ரெம்பர்.17

**அண்டை நாடுகளை அச்சுறுத்தும் போக்கை ஈராக் தொடர்ந்து கடைப் பிடித்து வந்தால், ஈராக் மீது தாக்குதல் நடத்த வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.**


**தனது எண்ணெய் வளத்தைத் திருடிவரும் குவைத் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக ஈராக் கூறியதை அடுத்தே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.**

எல்லைப்பகுதியில் உள்ள எண்ணெய்க்கிணறுகளில் திருத்த வேலைகளைச் செய்வதுபோல் தனது எண்ணெய் வளத்தை குவைத் திருடிவருவதால், அதன் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஈராக் கூறியிருந்ததாகவும் - அத்துடன் சவூதி அரேபியா வான் வெளியில் ஈராக் விமானங்கள் அத்து மீறிப் பறந்துள்ளதாகவும் -

ஐ.நாவால் தடைசெய்யப்பட்ட ஈராக்கிய வான்வெளியில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க, பிரிட்டிஷ் விமானப்படைகளின் விமானங்களின் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும்- குற்றஞ்சாட்டிய அமெரிக்க வெளியுறவுத் துறைச் செயலர் மெடலின் அல்பிரைட், வளை குடாப் பகுதியில் இருக்கும் அமெரிக்கப் படைகள்ஈராக்கின் இத்தகைய அத்துமீறல்களுக்குத் தக்கபதிலடி கொடுக்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக ஈராக் அத்துமீறல்களை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த மெடலின், ஐ.நா.பொதுச் சபைக் கூட்டமும், உலகத்தலைவர்களின் உச்சிமாநாடும் நடைபெறும் இந்தவேளையில் இத்தகைய செயல்கள் பெரும் மோதலைத் தோற்றுவிக்கும் செயலாகும் என்றும் தெரிவித்தார்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னர் குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததை அடுத்து ஏற்பட்ட வளைகுடாப் போரின் பின்னர், பன்னாட்டுப் படைகளால் குவைத் மீட்கப்பட்டதும், அன்றிலிருந்து ஈராக் மீது ஐ.நா.பல தடைகளை அமுல்படுத்தி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-4)


**கம்போடியத் தலைநகர் னோம் பென் மழைவெள்ளத்தினால் சூழப்பட்டுள்ளதால் பாதிப்படைந்த முதியவர் ஒருவர் தனக்குக் கிடைத்த சிறிதளவு நிவாரண உணவில் ஒரு பகுதியை படகு ஒன்றில் வந்து தானம் கேட்கும் இரு இளம் புத்த பிக்குகளுக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.**

## உலகில் முதல் தடவையாக

# கடலில் இருந்து மின் சக்தி உற்பத்தி இந்தியாவில் விரைவில் தொடக்கம்!

சென்னை,செப்.17

தமிழகத்தின் தூத்துக்குடி அருகே கடலில் ஒரு மெகாவாட்ஸ் மின் உற்பத்தி செய்யும் மிதக்கும் நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய கடல் தொழில் நுட்ப நிறுவனம் அறிவித்துள்ளது.

கடலின் ஆழத்திற்கும், மேற்பரப்புக்கும் இடையேயான வெப்ப வேறுபாட்டைக் கொண்டு மின் சக்தியை உற்பத்தி செய்யும் இத்தகைய நிலையம் அமைக்கப்படுவது உலகில் இதுவே முதற்தடவை என்றும் -

இந்த நிலையத்துக்கான இயந்திரங்கள் கோவாவில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் -

அவை விரைவில் தூத்துக் குடி வந்து சேர்ந்தவுடன் மின் உற்பத்தி நிலைய நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் -

தொழில் நுட்ப நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## நள்ளிரவு நேரத்தில் நரபலிப் பூஜை

# போலிச் சாமியாரைத் தேடி தமிழகப் பொலீஸ் வலை வீச்சு!

மதுரை,செப்.17

தமிழகத்தில் மதுரை அருகே அருள்ஞானசித்தா ஆசிரமத்தை நடத்திவந்த நளினசேகர சாமியார் என்பவரை நரபலிகள் கொடுத்ததற்காகப் பொலீஸார் தேடிவருகின்றனர்.

அழகாபுரி என்ற கிராமத்தில் சமீப காலமாகக் கண்கள் தோண்டப்பட்டு,கால்கள்,மற்றும்,கைகளின் விரல்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஒரு பெண் உட்பட மூன்று பேரின் சடலங்கள் சுமார் 15 நாள்கள் இடைவெளிகளில் தனித்தனியாகக் கண்டு பிடிக்கப்பட்டன. இது குறித்து அந்தப் பகுதியில் ஆசிரமம் நடத்தி வந்த நளின சேகரசாமியார் மீது ஊர்மக்களுக்குச் சந்தேகம் எழுந்தது.

ஒவ்வொரு பௌர்ணமி ,அமாவாசை தினங்களில் நள்ளிரவில் விசேட பூஜைகள் நடத்தப்படுவதும், முக்கியபிரமுகர்கள்,தொழில் அதிபர்கள்,ஆகியோர் அதற்கு வந்து போவதும் மக்களின் சந்தேகத்தை வலுவாக்கியது.

கடந்த 13ஆம் திகதி வாலிபர் ஒருவரைக்கடத்த முயன்ற கோஷ்டியைச் சேர்ந்த அன்சாரி அலி என்பவரை விரட்டிப் பிடித்த பொதுமக்கள்,அவரை அடித்து உதைத்த போது ஆசிரமத்தில் நடைபெறும் நரபலிப்பூஜை குறித்து அம்பலமானது.

இதனையடுத்து காட்டுப்பகுதியில் ஆசிரமம் இருந்த காளி கோவிலுக்கு மக்கள் ஆயுதங்களுடன் திரண்டு சென்றனர். ஆனால்அங்கிருந்து சாமியார் தப்பி ஓடி விட்டார். பூஜையில் கலந்துகொள்ள வந்திருந்த மதுரை நகரின் பிரபல தொழிலதிபர் ஒருவர் உட்பட இரண்டு பேர் பொது மக்களிடம் சிக்கினர்.

இவர்கள் பொலீஸிடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து தப்பியோடிய நளினசேகரசாமியாரை பொலீஸார் தனிப்படை அமைத்துத் தேடி வருகின்றனர் (ஒ)

## அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட

# இந்தியன் வங்கி ஊழல் வழக்குக்கு தனி நீதிமன்றம் அமைக்க அனுமதி!

சென்னை,செப்.17

தமிழ்நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்ட இந்தியன் வங்கி ஊழல் தொடர்பான வழக்கை தனி நீதிமன்றம் அமைத்து விசாரணை நடத்த மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியன் வங்கியின் தலைவராக இருந்த கோபாலகிருஷ்ணன் பல கோடி ரூபா பணத்தை வங்கி விதிமுறைகளுக்குப் புறம்பாக கடனாக வழங்கியதாகவும், அவற்றில் பெரும்பகுதியை அறவிட முடியாத கடன்கள் என்று கூறி தள்ளுபடி செய்ததாகவும் சில வருடங்களுக்கு முன்னர் குற்றச்சாட்டு எழுந்தது.

மேற்படி கடன்கள் த.மா.கா. தலைவர் மூப்பனார் உள்ளிட்ட சில முக்கிய அரசியல் தலைவர்களின் சிபாரிசுகளின் பேரில் வழங்கப்பட்டதாகவும், தமிழ்த் திரைப்படப் பிரமுகர்கள் பலரும் விதிகளை மீறிக் கடன் பெற்றதாகவும் கூறப்பட்டதால் தமிழகத்தில் இந்த ஊழல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. மத்திய புலனாய்வு அமைப்பு இது குறித்து விசாரித்து வந்தது.

இந்த வழக்கிலேயே தற்போது மத்திய அரசாங்கம் ஆணைபிறப்பித்துள்ளது. (ஒ)

# தமிழர்களுக்கெதிரான கலவரத்தைத் தடுக்கவே 'தடா' வழக்குகள் வாபஸ்!

## கர்நாடக அரசு தெரிவிப்பு!!

புதுடில்லி,செப்.17

நடிகர் ராஜ்குமாரைக் காப்பாற்றி, தமிழர்களுக்கு எதிரான பெரும் கலவரங்களைத் தடுக்கவே 'தடா' வழக்குகள் வாபஸ் பெறப்படுவதாக கர்நாடக அரசு இந்திய உச்ச நீதிமன்றத்தில் பதில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனையை ஏற்று அவனுக்கு உதவியதாகக் கூறப்படும் 121பேர் மீதான 'தடா' சட்டத்தின் கீழான வழக்குகளை வாபஸ்பெற கர்நாடக அரசு தீர்மானித்துள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வீரப்பனால் கொல்லப்பட்ட பொலீஸ் அதிகாரி ஒருவரின் தந்தை தொடர்ந்த வழக்கை ஏற்ற நீதிமன்றம் பதில் மனுதாக்கல் செய்யுமாறு கர்நாடக அரசுக்கு உத்தர விட்டது. இதனை அடுத்து சமர்ப்பிக்கப்பட்ட பதில் மனுவிலேயே முன்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களின் 18 ஆயிரம் சதுரக் கிலோமீற்றர்களில் உள்ள காட்டுப்பகுதியில் நடமாடும் வீரப்பனைப்பிடிப்பது மிகவும் கடினம் என்றும் -

வீரப்பனைக் கதாநாயகனாக நினைக்கும் உள்ளூர் மக்கள் அவனைப்பற்றிய தகவல்களை பொலீஸாருக்குத் தருவதற்கு மறுப்பதாகவும், கர்நாடக அரசு பதில் மனுவில் தெரிவித்துள்ளதுடன் -

ராஜ்குமாரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் கர்நாடகத்தில் பெரும் கலவரம் மூண்டு அங்குவாழவும் தமிழர்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் பெரும் சேதங்கள் விளைவதைத் தடுக்கவே 'தடா' வழக்குகள் வாபஸ் பெறப்படுவதாகவும் கூறியுள்ளது. (ஒ-4)

## பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா கோரிக்கை!

டாக்கா,செப்.17

பங்களாதேஷ் சுதந்திரமடைந்த 1971ஆம் ஆண்டு, பாகிஸ்தானுடன் யுத்தம் நடந்த காலகட்டத்தில் போர்க்குற்றங்கள் இழைத்த பாகிஸ்தானியர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்று பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளிடம் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா கோரிக்கை விடுத்துள்ளார். (ஒ)

## இந்தோனேசியா குண்டு வெடிப்பு

# சுகார்டோவின் மகனைக் கைது செய்யும்படி உத்தரவு!

ஜகார்த்தா,செப்.17

இந்தோனேசியாவின் முன்னாள் அதிபர் சுகார்ட்டோவின் இளைய மகனைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் ஜகார்த்தாவில் மூன்று தினங்களின் முன்னர் பங்கு விற்பனை மையத்தின் அருகே இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக சொனி சுகார்ட் டோவைக் கைது செய்யும்படி அதிபர் அப்துல் ரஹ்மான் வாகிட் கட்டளையிட்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்த வழக்கில் சுகார்ட்டோ நீதி மன்றத்தில் ஆஜராக வேண்டிய தினத்துக்கு முதல் நாள் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 13பேர் கொல்லப்பட்டனர். 15பேர் காயமடைந்தனர்.

இதேசமயம் -

இரண்டாவது தடவையும் முன்னாள் அதிபர் சுகார்ட்டோ உடல் நிலையைக் காரணம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-7)

## தீவிரவாதிகள சரண்!

புதுடில்லி,செப்.17

அசாம் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடிவரும் தீவிரவாதிகளில் 200 பேர் இந்திய ராணுவத்திடம் சரணடைந்துள்ளனர். (ஒ)

# தற்போது நடைபெறும் போரை உள்விவகாரமாகக் கருதமுடியாது

## ஐ. நா. செயலாளர் நாயகத்துக்கு கடிதம்

யாழ்ப்பாணம், செப். 17

தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கொடூரமானதும் நியாயமற்றதுமான போரை இனியும் உள்நாட்டு விவகாரம் என்று கூறமுடியாது. இங்குள்ள மக்கள் தொடர்ந்தும் ஒரு பாதுகாப்பு அற்ற நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினால் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்ட 'பக்ஸ்' செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

''இலங்கையில்போர் நிறுத்தம்'' என்ற தலைப்பில் நியூயோர்க் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உக்கிர மோதல்கள் யாழ். குடாநாட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாகப் பொதுமக்களும் சொத்துக்களும் மிகவும் மோசமாக அழிந்துள்ளன. தொடர்ந்தும் அழிந்து கொண்டிருக்கின்றன.

நாளாந்தம் தாழப் பறந்து திரியும் 'மிக்' ரக யுத்த விமானங்களின் சத்தங்கள், பல்குழல் றொக்கட் மற்றும் ஆட்டிலறி பீரங்கித் தாக்குதல்களின் சத்தங்கள் ஆகியவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் போர் மூலம் சமாதானம் என்பதை எதிர்க்கின்றனர்.

1972 ஆம் ஆண்டிலும் 1978 ஆம் ஆண்டிலும் ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அரசமைப்பை மாற்றி அமைத்தன. ஆனால், அவை சிங்களம் பேசத்தெரியாத இலங்கையில் வசிக்கும் சிறுபான்மையினருக்கு எந்த நிவாரணத்தையும் வழங்கவில்லை. துரதிர்ஷ்ட வசமாக தற்போது ஆட்சியில் உள்ள அரசாங்கம் சமாதானம் என்ற கோஷத்துடன் அதிகாரத்துக்கு வந்தும் கடந்த ஆறு வருட காலத்தில் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை.

அரசமைப்பில் பிராந்திய அதிகாரத்தை வழங்குவதற்கென 1995 ஆம் ஆண்டு முன் வைக்கப்பட்ட சீர்திருத்தங்கள் மேலும் பல தடவைகள் மாற்றம் செய்யப்பட்டன.

இதன் காரணமாகவே தமிழ் மக்களின் அபிலாசைகள் நிறைவேற்றப்படாது சமத்துவமும் நீதியும் வழங்கப்படவில்லை.

விசுவாசமான அணுகுமுறையே உண்மையாக நடைமுறைச் சாத்தியத்துக்கு உதவக் கூடியதாக இருக்கும் தற்போதைய அரசாங்கத்தின்கொள்கை ''போர் மூலம் சமாதானம்''. ஆனால், சமாதானத்துக்கு உண்மையான நேரடியான பேச்சுக்கள் மூலமான கருத்து ஒருமித்ததாக இருக்க வேண்டும்.

இலங்கையில் கொடூரமானதும் நியாயமற்றதுமான போரைத் தொடர்ந்தும் உள்நாட்டு விவகாரம் எனக் கூறுவதற்கில்லை. மக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பற்ற நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சர்வதேச மனிதநேய சட்டங்கள் இங்கே பேணிக்காக்கப்படுவதில்லை.

எனவே உங்களை விநயமாகக் கேட்டுக் கொள்வது ஒரு பொது நிலையை உருவாக்கி உடனடியாக இந்தப் போரை நிறுத்துப்படியே — என்றுள்ளது. (இ-9)

## சிப்பாய்க்கு பிணை

நெல்லியடி, செப். 17

இராணுவ பஸ் விபத்தில் இளைஞன் ஒருவர் பலியான சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இராணுவச்சிப்பாய் ஒருவரை 2 ஆயிரது 500ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா ஆள் பிணையிலும் செல்லுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 11 ஆம் திகதி மந்திகை மடத்தடிப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்த வதிரியைச் சேர்ந்த இளைஞன் அன்றிரவு யாழ். போதனா மருத்துவமனையில் மரணமானார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருந்த குறித்த இராணுவ பஸ் சாரதியான கனேகம விதான பதிரனகே வீரசூரிய (வயது 30) என்ற சிப்பாய் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் மாவட்ட நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் மேற்கண்ட அபராதத்தை விதித்தார். (இ-109)


## கொழும்புக்கு பொருள்களை அனுப்புவோர் கவனத்துக்கு

கொழும்புக்கு கப்பல் மூலம் புடைவை, பாஸ்லி வகைகளை பொதிகளாக்கி அனுப்ப விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

**த. குமாரசாமி அன் சன்ஸ்**
248/1, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (78491)


## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா குணரத்தினம்

(முன்னாள் அதிபர் (1970-1974) யா/இடைக்காடு ம.வி)

13-09-2000 புதன்கிழமை அன்று லண்டனில் இறையடி சேர்ந்த எமது முன்னாள் அதிபரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன், இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்
ஊழியர்கள், மாணவர்கள்,
யா/ இடைக்காடு மகாவித்தியாலயம்

(78487)

## மரண அறிவித்தல்கள்

### கந்தரட்ணம் விஜயராமன்

மல்லாகம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த கந்தரட்ணம் விஜயராமன்(இலங்கை மின்சாரசபையின் முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் சுன்னாகம்) 15-9-2000 இல் ஜேர்மனியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தரட்ணம் சின்னத்தங்கத்தின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா, சிவக்கொழுந்தின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நித்திய லட்சுமியின் அன்புக் கணவரும் சுரேஷ் (ஜேர்மனி), உமேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, காலஞ்சென்ற சோதிபதியம்மா, காந்திமதி (லண்டன்) காலஞ்சென்றவர்களான நடராசா, நாராயணபிள்ளை, வன்னியசிங்கம்(கொழும்பு), காராளசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை, கணபதிப்பிள்ளை, செல்லத்துரை, நடராசா (கனடா), அன்னம்மா, தவமலர், பூங்கோதை, அன்னலட்சுமி (கொழும்பு) ஞானதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19-9-2000) செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இராசரத்தினம் (வவா)
(மருமகன்)

வேத உடையார் வளவு,
மல்லாகம். (78482)

### நவரட்ணம் ரவீந்திரகுமார்

பூநாறிலேன், கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நவரட்ணம் ரவீந்திரகுமார் (15 - 09 - 2000) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் திரு. திருமதி நவரத்தினம் பரமேஸ்வரியின் அன்புமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும், நிலாஞ்சன், நிஷாந்தினி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (17-09-2000) காலை 9. 00 மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நவநாதன் (மச்சான்)
குணரட்ணம் (தமையன்)

கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (78471)

### திருமதி காசிநாதன் பூமணி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், தற்போது வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய திருமதி காசிநாதன் (பட்டு) பூமணி அவர்கள் நேற்று(16 - 09 - 2000)சனிக்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் காசிநாதன் (பட்டு) அவர்களின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17—09—2000 ஞாயிற்றுக்கிழமை, பண்டாரிகுளம் வவுனியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 3 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. நடராசா (ஆனந்தி)
(சகோதரன்)

பொன்னம்பலம் வீதி,
உடுவில் றோட்,
மானிப்பாய். [78484]

## மரண அறிவித்தல்கள்

### சின்னக்குட்டி நாகேசு

(சரவணை)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி நாகேசு 15 - 9 - 2000 அன்று காலமானார்.

இவர் மீனாட்சி, அன்னம்மாவின் அன்புக் கணவரும், பரமநாதன் (கொழும்பு), கருணா (கனடா), இராஜேஸ்வரி, சாந்தி, பரமேஸ்வரி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அழகராசா, அரவிந்தன். பற்பநாதன், நாகராசா, தனம், பாமா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, பொன்னம்மா, நல்லமுத்து மற்றும் கற்பகம், சவுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தம்பிராசா (கொழும்பு), காலஞ்சென்ற விநாசித்தம்பி (தம்பனை) மற்றும் கந்தசாமி, மாணிக்கம் (மல்லாவி), இராசகிளி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் செல்வன் (ஜேர்மனி), சந்திரா (லண்டன்), சந்திரன் (கனடா), பவான் (லண்டன்), குகன் (லண்டன்) ஆகியோரின் பெரியப்பாவும் விஜி, கண்ணன் (கொழும்பு) கமலநாதன் (ஆசிரியர், யாழ் / வைத்தீஸ்வரா மகா வித்தியாலயம்), மனோகரன், யதுர்ஷன் (கனடா), யனுஷா (கனடா), விதுஷா, ஜெயந்தி, சுமதி, பிரபா, விஜயன், சுதா, சுரேஷ், கஜனி, பாலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (16-9-2000) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி. ப. 2 மணிக்கு சரவணை புன்னக்கண்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
அ. ராசசத்தி

சரவணை. (78463)

இலக்கண வித்தகர்

### இராமசாமி நமசிவாய தேசிகர்

கட்டுவன் மயிலிட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இலக்கணவித்தகர் இராமசாமி நமசிவாய தேசிகர் 11-09-2000 திங்கட்கிழமை காலை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமி - பர்வதம் தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற அப்பாத்துரை நாகம்மா தம்பதிகளின் மருமகனும், கமலாம்பிகையின் அன்புக்கணவரும், தர்மாம்பிகை (ஆசிரியை, மகாஜனக் கல்லூரி), ஞானாம்பிகை (கனடா), தவமணிதேவி, புனிதவதியார் (ஆசிரியை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) பாலச்சந்திரன் (அதிபர், சுழிபுரம் வடக்கு, ஆறுமுகவித்தியாலயம்), கிருபாகரன் (முகாமையாளர், ப.நோ. கூ. சங்கம், பருத்தித்துறை), இராமச்சந்திரன்(ஜேர்மனி), கௌரிதேவி (ஜேர்மனி), ஞானகரன் (U.K), ஸ்ரீகாந்தன் (U-K), உமாகாந்தன் (U-K) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் விங்கோற்பவநாதர் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), அப்பாத்துரை (கனடா), சிவசிதம்பரநாதன், சிவகடாட்சம், வசந்தகுமாரி, சந்திரவதனா, லலிதா (ஜேர்மனி), யோகீஸ்வரன் (கனடா), காந்திமதி (U-K) ஆகியோரின் மாமனாரும் சிவசங்கர், ரவிசங்கர், கீதா, மேர்சி, சுஜன், விமலா, சசி, பார்க்கவி, அச்சுதன், காயத்திரி, பாரதி, நளினி, நிரோஜன், வேணுகா, வேணுகோபன், ஜான்சி, அஜணி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரரும், இரத்தினசாமி, காலஞ்சென்ற குமாரசாமி (ஓய்வுபெற்ற சிறாப்பர், இந்தியன் ஓவசீஸ் வங்கி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2000-09-20 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் சென்னையில் நடைபெறும்.

அன்றையதினம் சங்கானையில் உள்ள எமது இல்லத்தில் துக்க அனுஷ்டானம் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தவர்.

அரசடி வைரவர் கோயிலடி,
சங்கானை. (78489)

உதயன்

## தண்ணீர், தண்ணீர்!

காரைநகர் தெற்கு வாழ் மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் பெரும் கஷ்டப்படுகின்றார்கள். குழாய்நீர் விநியோகத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்த கிணறும் வற்றிவிட்டது; அதனால் குழாய்நீர் விநியோகமும் இடைநிறுத்தப்பட்டு விட்டது. ஏனைய நீர்நிலைகளும் வற்றிவிட்டதால் தண்ணீருக்குப் பெரும் பஞ்சம் நிலவுகிறது.

காரைநகர் தெற்கில் மட்டுமன்றி, குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் இந்த நிலை விரைவில் உண்டாகக் கூடிய ஆபத்துத் தெரிகிறது. கடந்த சுமார் ஆறுமாதங்களுக்கு மேலாக யாழ். மாவட்டத்தில் போதிய மழை வீழ்ச்சி இல்லை. இரண்டொரு தடவைகள் பெயருக்கு வந்து புழுதி போக்கிச் சென்றது. ஒரு சில இடங்களில் மட்டும் சுமாரான மழை பெய்து மண்ணை நனைத்தது. அதனைக் கண்டு புழுதி விதைப்புச் செய்த விவசாயிகள் தலைமேல் கை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழுக்கு ஆவணி மாதம் முடிந்து புரட்டாதி இன்று பிறக்கிறது. புரட்டாதியிலாவது கணிசமான மழை பெய்யாதா என்ற ஏக்கத்துடன் விவசாயிகள் காத்திருக்கின்றனர். மேடார்ந்த நிலப்பிரதேசங்களில் உள்ள கிணறுகள் வற்றிவிட்டன. அதனால் இன்னும் இரண்டொரு வாரத்தில் மழை 'இறங்கா'விட்டால் குடாநாட்டின் மிகப் பல பகுதிகளில் தண்ணீர்ப் பஞ்சம் உண்டாகிவிடும்.

யாழ்ப்பாணக் குடாநாடு வானம் பார்த்த பூமி; வரண்ட பிரதேசம். அதனால் கோடைகாலத்தில் பல பிரதேசங்களில அடிக்கடியும், ஏனைய பகுதிகளில் வழமையாகவும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுவது உண்டு.

மனிதனுக்கு உணவை விடவும் பிரதானமான தேவையாக உள்ளது தண்ணீர். ஒருவேளை உணவைத் தவிர்த்துக் கொள்ளலாம்; ஆனால் தாகம் வரும் வேளையில் தண்ணீர் அருந்தாமல் நீண்ட நேரத்தைக் கழிக்க முடியாது. "பச்சைத் தண்ணியும் குடியாமல் இருக்கிறான்" "நாவறண்டு சாகப்போகிறான்" "தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்கக் கூடாது" என்ற கிராமியப்பேச்சு வழக்குகள் மக்கள் தண்ணீரின் தேவையை, முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பதனைப் புலப்படுத்துபவை.

மழை பெய்வதற்கான காரணிகளை அறிந்து அதற்கேற்ற வகையில் இயற்கை வளங்களைப் பேணுவதில் அக்கறை காட்டும் தன்மை அருகி விட்டது. எமக்கு முந்திய சந்ததியினர் இயற்கையைப் பேணி அதன் வளங்களை அளவோடு பயன்படுத்துவதில் காட்டிய அக்கறை இப்போதில்லை.

எமது உடனடித் தேவையைப் பூர்த்தி செய்தால் அதனால் இயற்கைக்கு உண்டாகக் கூடிய பாதிப்புகள் என்ன, பின்விளைவுகள் என்ன என்று சற்றும் சிந்தியாமல் செயற்படும் தன்மையே விரவிக் காணப்படுகிறது.

மக்கள் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி, சமூகமாக மட்டுமன்றி, திட்டமிடலாளர்கள் தொடங்கி நனைய நிர்வாகிகள் வரை அரசாங்கங்களும் அபிவிருத்தி என்ற பெயரில் உடனடித் தேவைகளை நிறைவேற்றுவதில் மட்டுமே கருத்தைச் செலுத்துகின்றன. எதிர்காலத்தில் இயற்கைக்கு உண்டாகக் கூடிய விளைவுகள் குறித்துச் சிந்திப்பதில்லை.

இங்கு மட்டுமன்றி, உலகளாவிய ரீதியில் இயற்கையையும் அதன் வளங்களையும் பேணுவதில் கவனம் செலுத்தாமல், சுயநலம் மேலோங்கியதாலேயே இன்றைய காலமாற்றங்களும் இயற்கை மீதான சேதங்களும் எம்மைச் சூழ்ந்துள்ள வினைகளாகி உள்ளன. பூமியின் வெப்பநிலை அதிகரித்துச் செல்லுதல், 'எல்டினோ' வளிப் படலத்தில் ஓசோன் ஓட்டை ஆகிய பயங்கரமான விளைவுகளுக்கு எல்லாம் மனிதன் செய்த முன்னர் குறிப்பிட்ட வினைகளே காரணம்.

மழை நீரைத் தேக்கவும், குளங்களைத் திருத்தவும், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், மரங்களைக் கண்டபடி தறிக்காமல் இருப்பதோடு அவற்றை வளர்க்கவும் குடாநாட்டின் ஒவ்வாரு பிரஜையும் அக்கறை கொள்ளவேண்டும்; அவற்றை நாடிச் செயற்படவேண்டும் .

இல்லையேல் -

*விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள் நின்று உடற்றும் பசி* - என்ற வள்ளுவன் வாக்கு மெய்யாகி இம்மண்ணின் மக்கள் வாடுவர்; பசியால் மடியவும் நேரிடலாம்.

# இலக்கணம் கற்பிப்பதில் சிறந்து விளங்கிய இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர்

மொழித்திறன முட்டறுத்து அதன் ஆழ, நீள, அகலங்களைத் தெளிவாக அறிவதற்கு இலக்கண அறிவு மிகவும் இன்றியமையாதது என்று ஒரு காலத்தில் எதிர்பார்க்கப்பட்டது. இலக்கணக் கல்வியிலே முழுமை பெறத் தருக்க நூலறிவு (LOGIC)மிகுதியும் வேண்டும். தருக்கத்திலே தேர்ச்சிபெற, உயர்ந்த மதிநுட்பம் தேவை.

மாவிட்டபுரம், வீமன்காமம் மகா வித்தியாலயத்திலே உயர் வகுப்புகளிலே கணிதம், தமிழ், சித்திரம் ஆகிய பாடங்களைத் திறம்படக் கற்பித்து வந்த, தமிழ்ப் பண்டிதரும் பயிற்சி பெற்ற தமிழாசிரியருமான ஒருவருக்கு மேற்குறித்த மூன்று திறன்களும் குறைவற நிறைந்திருந்தன. இவற்றோடு தமது காலத்திலே இலக்கண அறிவிலே தன்னிகரற்று விளங்கிய மஹாவித்துவான் சி. கணேசையர் அவர்களை அடுத்து, மரபுவழி நின்று முறையாகக் கற்று ஐயந் திரிபுகளினின்றும் நீங்கிய சிறப்பும அவருக்கு வாய்த்திருந்தது.

ஆக, இயற்கை ஆற்றல்களோடு 'கலங்கரை விளக்கம்' போன்ற நல்லாசிரியர் வழிகாட்டலும் முன்னைத் தவத்தால் கிடைத்த அருநிதிகளாய் அவரைப் பேரறிஞர் நிலைக்கு உயர்த்தின.

அவர் யார்?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் 'இலக்கண வித்தகர்' பட்டமும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் 'மஹாவித்துவான்' பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற இராமசுவாமி நமசிவாய தேசிகரே அவர்.

ஒருவன் ஒரு துறையிலே பூரணமான அறிவுபெற அவன் நாலு கட்டங்களைத் தாண்ட வேண்டும் என்கிறது தமிழ் இலக்கண நூலாகிய நன்னூல்.

1) நல்லாசானைத் தேர்ந்து அவனிடம் பாடத்தினை அமைவாக (தெளிவாக) - அடக்கமாகக் கேட்டல் - *முதற்கட்டம்.*

2) ஒருமுறைக்கு இருமுறை (ஆசிரியனிடம்) கேட்டல் - *இரண்டாம் கட்டம்.*

3) சகபாடிகளோடு பாட சம்பந்தமாக உரையாடல் (தான் அறிந்ததைக் கூறல், சகபாடிகள் கூறக் கேட்டல், விவாதித்தல்) - *மூன்றாம் கட்டம்.*

4) மாணவர்களுக்கு ஐயந்திரிபறக் கற்பித்தல் - *நான்காம் கட்டம்.*

தேசிகரானவர் இந்த நான்கு கட்டங்களையும் தாண்டி வந்தவர் என்பது உண்மையே. ஆயினும் நாலாம் கட்டமாகிய கற்பித்தல் (பண்டித மாணவருக்குக் கற்பித்தல்) அவர்தம் தலையாய பணியாக விளங்கியது. இதுபற்றி அவா சொன்னவை இவை:-



"நான் பண்டிதர் பரீட்சையிலே சித்தியெய்தி அதனை அறிவிக்கக் கணேசையாவிடம் மிகுந்த கூச்சத்துடன் சென்றேன். அவர் 'நீ பண்டிதராகி விட்டாய். நான் கற்பிக்கும் பாலபண்டித மாணவர்களுக்கு இனி நீ கற்பிக்கலாம்' என்றார்.

"வசிட்டரால் 'பிரமரிஷி' என்று அழைக்கப்பட்டது போன்ற புளகம் எனக்கு. மாணவர்களுக்குப் பிழையின்றிக் கற்பிக்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு நான் மீண்டும் படிக்கத் தொடங்கிய அந்த அனுபவத்தால், எனது இலக்கண அறிவில் முன்னில்லாத தெளிவும் விளக்கமும் உண்டாயின."

தேசிகர் கூற்றிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய உண்மைகள் இரண்டு உள்ளன.

(அ) ஒரு குறிப்பிட்ட கல்வித் தராதரத்தைப் பெறும்வரை கற்பித்தலில் இறங்கக் கூடாது.

(ஆ) 'மாணவர்களுக்கு எதனையும் பிழையாகக் கூறலாகாது' என்ற பொறுப்புணர்ச்சியோடு ஆசிரியன் தனது பாடங்களை நன்கு ஆயத்தஞ்செய்து கற்பித்தல் வேண்டும்.

பண்டிதர்ப் பட்டம் பெறும் வரை மிகக கவனமாகப பெருமுயற்சியோடு கற்றுப் பட்டம் பெற்றபின், தான் கற்றதைக் கற்பிக்காமலும், தொடர்ந்து கற்றுக் கொண்டிராமலும் 'கர்ப்பூரப் பொதி சுமந்த கழுதைகள்' ஆனோர் பலராக, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, இலக்கிய கலாநிதி மு. கந்தையா, பண்டிதா ச.பொன்னுத்துரை, பண்டிதர் வ.நடராசா, பண்டிதர், வ. துரைசிங்கம் போன்றோர் தாம் கற்றவற்றில் அசாத்திய தன்னம்பிக்கையும் தெளிவும் பெற்றிருந்தமைக்கு, அவர்கள் கற்றதோடு கற்பித்து வந்தமையுமே முக்கிய காரணங்களாகும்.

எனினும், இவர்களுக்கில்லாத சிறப்பு ஒன்று இலக்கண வித்தகருக்கு இருந்தது. தமது இறுதிக் காலம்வரை தம்மை நாடிவந்த பல தரப்பட்ட மாணவர்களுக்கும் அவர் கற்பிக்கத் தவறியதில்லை. இலக்கிய கலாநிதி மு. கந்தையா, பண்டிதர் ச.பொன்னுத்துரை தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இன்று தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்றுவரும் இளைஞர் பிரசாந்தன் வரை அவரின் மாணாக்கர் பரம்பரை மூன்று தலைமுறைகளுக்கு மேல் நீண்டது என்று சொன்னால், அது மிகைவுரையன்று.

இலக்கண வித்தகருக்கு உள்ள மற்றொரு சிறப்பு எந்தக் கடினமான இலக்கண விடயத்தையும் மிகவும் எளிமையாகக் குழந்தைக்கு அம்புலி காட்டுவதுபோலக கவர்ச்சியாகக கற்பிக்கும் திறமை. இது அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது. இலக்கியத்தைக கற்கண்டாய் மாணவர்களுக்கு இனிக்க வைத்தார் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை. இலக்கண வேப்பெண்ணெயை கருப்பஞ்சாறாகப் பிழிந்து மாணாக்கர்களுக்குப் பருக்கினார் இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர்.

### சொக்கன்

ஆனால் ஒரு குறை. பண்டிதமணி வரிசையினர் தமது அறிவுச் செல்வங்களை நூற்களஞ்சியங்களாகத் திரட்டி வைத்துச் சென்றதுபோல இலக்கண வித்தகர் திரட்டி வைக்கவில்லை. காரணம் கேட்டபொழுது, "எனக்கு நான் படித்தவற்றில் இன்னமும் சில ஐயங்கள உள்ளன. அவற்றைப் போக்கிக் கொள்ளாமல் நூல் எழுத எனக்குத் துணிவு இல்லை" என்பது அவரின் பதிலாக இருந்தது. "அறியாமையை அறிந்திருந்த பேரறிவினர்" என்று இதற்காக அவரைப் பாராட்டலாம். (அறியாததை அறிந்தது போலக் காட்டும் அறிஞரும் உளர்!) ஆனால் அவரின் அனுபவமும் அறிவும் அடுத்துவரும் பரம்பரையினருக்கு அரிய செல்வமாக விட்டுச் செல்லாதது கவலையைத்தான் அளிக்கின்றது.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச சங்கம் அண்மைக் காலத்தில் அவரின் உரைகளை (கருத்தரங்கொன்று அமைத்து) ஒலிப்பதிவு செய்ய முயன்றதும் கைகூடவில்லை.

இவ்வாண்டிலேயே தேசிகர் ஐயாவின் தசாபிஷேக வைபவம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திலும் துர்க்கா மணிமண்டபத்திலும் மிகச் சிறப்பாகக கொண்டாடப்பட்டன. அந்த வைபவத்தின்போது அவருடைய கட்டுரைகள், கவிதைகள் என்பன ஒரு தொகுதியாக வெளியிடப்பட்டன. தேசிகர் பேரில் சிறப்பு மலரும் வெளியாயிற்று. குடத்துள் விளக்கைக் கோபுரதீபமாக அன்று அவரின் மாணாக்கர்களும் ஆர்வலரும் கண்டது நேற்று நடந்தது போல மனக் கண்களிலே திரையிடுகின்றது.

தேசிகர் ஐயா, "நின்றான் கிடந்தான் தன் கேளல் அழச் சென்றான்" என்ற முதுமொழியை மெய்மொழியாக்கித் தமது எண்பத்தைந்தாவது வயதிலே எம்மையெல்லாம் தம்மை நினைந்துருகவைத்து, விண்ணுலகு சென்று விட்டார். விண்ணுலகிலும் தம் ஆசிரியர் போன்ற முன்னவரோடு இலக்கண ஐயங்களை முட்டின்றித் தெளிந்து தெளிவிப்பார் என்பதே எமது நம்பிக்கை. அவரின் ஆன்மா சாந்தியடைக!

**நாளை**
**புரட்டாதி 2**
**திங்கட்கிழமை**
*திதி:* பஞ்சமி
முன்னிரவு 10.49 வரை
*நட்சத்திரம்:* பரணி
பிற்பகல் 1.50 வரை
மகாபரணி-கார்த்திகை விரதம்
*சுபநேரம்:* 12.03 - 1.33
*ராகுகாலம்:* 7.33 - 9.03
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

**வெற்றிக்கு நம்பிக்கையே துணைவன்**
***- பிலிப் மஸிங்கர்***

## கனவு! கற்பனை!! காட்சி!!!

நாங்கள் செய்திருக்க வேண்டியவற்றைச் செய்யாமல் விட்டதற்காக - செய்யக் கூடாதவற்றைச் செய்ததற்காக -

தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் எமது மக்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

நாங்கள் பிரிந்து நின்றோம்; அதனால் எமது இனமே சரிந்து நின்றது!

எமக்குள்ள பிளவுகளை வளர்த்தோம்; அதனால் எமது மக்கள் குழம்பிப் போய்விட்டனர்!

எமக்குள்ளேயே பல பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டோம்; அதனால் எமது மக்கள் பல கரைச்சல்களை அடைந்தனர்.

எமது மக்களின் அபிலாஷைகள் என்ன என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். முன்னைய தலைவர்கள் சமாதான - சாத்வீக வழிகளில் அவற்றை வென்றெடுக்க முயன்றனர். அவர்களால் முடியவில்லை. அதனால், எம்மவருட் பலர் ஆயுதம் ஏந்தினோம்; போரிட்டோம்.

ஆனால் –

இப்போதும் களத்தில் நின்று களைக்காமற் போரிடுபவர்களைப் போன்று எம்மாற் போரிடமுடியவில்லை. அதனால் "மூத்தண்ணா" மூக்கை நீட்டிய முதற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி - எமது பலவீனத்தைக் "கௌரவமாக" மறைத்துக் கொண்டு ஆயுதப் போரைக் கைவிட்டோம்; அமைதி வழிக்குத் திரும்பினோம்.

ஆட்சியாளருடன் ஒத்துழைத்தோம்; மக்களின் அபிலாஷைகளை எடுத்துரைத்தோம்.

அனைத்தையும் செய்வதாக அவர்கள் சொன்னார்கள்; ஆனால் அவர்கள் எதையும் செய்ததாக எம்மால் சொல்ல முடியவில்லை.

அரசு, எம்மைத் தனக்காகப் பயன்படுத்த நாங்கள் உடந்தையாக இருந்துவிட்டோம்; அரசை எமக்காக - எம் மக்களுக்காகப் பயன்படுத்தும் உத்தியையோ உறுதியையோ எம்மால் உருவாக்க முடியவில்லை.

அமைதி வழி தோற்றுவிட்டால், மீண்டும் ஆயுதம் ஏந்தத்தானே வேண்டும்?

ஆனால் –

எம்மால் அதைச் சிந்தித்தும் பார்க்க முடியவில்லை: எமது "பலமும்" எமது "உறுதி"யும எமது "ஒற்றுமை"யும் எங்களுக்குத் தெரிந்தவைதானே!

எமது ஆயுதப் போராட்டமும் தோற்று – அமைதிப் 'போராட்டமும்' தோற்றுவிட்ட நிலையில் –

கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி எங்கள் முக்கியத்துவத்தை - எங்கள் செல்வாக்கை - வளர்க்கத் தீர்மானித்தோம்.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் – சிறுபான்மையினர் புறக்கணிக்கப்படும்போது - அடக்கி ஒடுக்கப்படும் போது - உரிமைப் போராட்டம் - சுதந்திரப் போராட்டம் வெடிப்பதுண்டு.

போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும் அரசாங்கம், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சாதாரண மக்களுக்கு எல்லாவகையான உதவிகளையும் தான் செய்வதாகக் "காட்டிக்" கொள்ளப் பெரிதும் முயலும்; அப்படிச் செய்யாவிட்டால், அரசே, சுதந்திரப் போராட்டத்தை நியாயப்படுத்துவதாக ஆகிவிடும்!

இதை நன்குணர்ந்த எமது அரசு, எமது மக்களுக்கு உணவு, மருந்து வகைகளை அனுப்பி வருகின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில அபிவிருத்தி வேலைகளையும் செய்து வருகின்றது. இந்த நிலையை எமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கினோம். நாங்கள் அரசுடன் ஒத்துழைக்கின்றபடியால்தான் - நாங்கள் அரசை வற்புறுத்தியபடியால் தான், அரசு இந்த உதவிகளைச் செய்கின்றது எனப் பிரசாரம் செய்தோம்.

நாங்கள் வலியுறுத்திக் கேட்டிராவிட்டால், மின்சாரம் வந்திருக்காது; தொலைபேசி கிடைத்திருக்காது என்றோம்.

நாங்கள் சொல்வதை எமது மக்களும் நம்பினார்கள் என்று நம்பினோம்.

"சுதந்திரம் எமது பிறப்புரிமை" என்று வீறு கொண்டெழுந்த மக்களிடம் "சோறு சாப்பிடுவதே முதற்கடமை" என்றோம்.

"விடுதலை தவிர வேறேதும் வேண்டாம்" என்று வீராவேசத்துடன் வந்தவர்களுக்குச் சில அனுகூலமான சலுகைகளை அள்ளி வீசினோம்.

இந்த நிலையில் –

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. நாங்கள் செய்த 'சேவை'களையும் 'உதவி'களையும் நினைவூட்டிக்கொண்டு மக்களிடம் போனோம். மக்கள் எங்களை மறக்கவில்லை; நாங்கள் செய்தவற்றை மறக்கவில்லை; நன்றி சொல்ல மறக்கவில்லை.

ஆனால் - எங்களுக்கு வாக்களிக்க அவர்கள் மறுத்துவிட்டார்கள்; மறுத்தே விட்டார்கள்!

"தனிப்பட்ட உதவிகளை விட, எம் இனத்தின் உயர்ச்சியே பெரிது; எம் இனத்தின் விடுதலையே பெரிது.

கெஞ்சி மன்றாடி, கேட்டு வாங்கிச் சாப்பிடுவதைவிட, சுதந்திரக் காற்றைச் சுவாசித்துக்கொண்டு பட்டினி கிடப்பது மேலானது" - என்றெல்லாம் எமக்கே உபதேசிக்கத் தொடங்கிவிட்டார்கள்!

### மணி மண்டபம்

மக்கள் சக்தி மகத்தான சக்தி; எல்லோரையும் எக்காலத்திலும் பேய்க்காட்டிக் கொண்டே இருக்க முடியாது –

என்ற உண்மைகளை நாம் உணர்ந்து கொண்டோம் என்பதைவிட, மக்கள் எமக்கு உணர்த்தினார்கள் என்பதே பொருத்தமானதாகும்.

நிலைமையைப் புரிந்துகொண்டு எங்கள் "தலைமை" ஆசையைக் கிள்ளி எறிந்துவிடுகின்றோம். மக்களோடு மக்களாக நின்று, எமக்கு விடுதலை தரக்கூடியவர்களை வரவேற்கக் காத்திருக்கின்றோம் - என்றனர் மக்கள்!

அது மட்டுமா?

"ஆகா இவர்களல்லவா தலைவர்கள்! தலைவர்கள் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்!" - என்று பாராட்டும் பொதுமக்கள் –

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று" பாடி, ஆடி தம் மகிழ்ச்சியையும் மன நிம்மதியையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறார்கள்......

★ ★ ★ ★

என்ன வாசகர்களே! அதிசயமாக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இது ஒரு கனவு தான்!. பொதுமக்கள் நாளாந்தம் காணும் கனவு தான்! அவர்களின் கற்பனை தான்! அவர்களினது கருத்துக் காட்சியே தான்!

கனவு நனவாகாதா? கற்பனை உண்மையாகாதா? கருத்துக் காட்சி கண்முன்னே உயிர்பெற்று வராதா? - என்று உங்களுக்குள் எண்ணுகிறீர்களா?

**சித்தன்**

# தாயகத்தை விட்டு ஓட்டம்!

தாயகம் என்னும்போது தாயின் நினைவுதான் வருகின்றது. தாயினும் இனியது தாயகம் என்றால் அது மிகையாகாது. கூடவிருந்தே அதன் சுகத்தை அனுபவிக்கத் தெரியாது எங்கோ தொலைவில் இருக்கும் சொர்க்கத்தைத் தேடி உலகெங்கும் மனிதர்கள் ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப் புறப்பட்டவர்களில் பலர் தமது இலக்கை எட்டிவிடுகிறார்கள். சிலர் சொர்க்கத்தைத் தேடிக் கரடுமுரடான பாதைகளில் இறங்கித் தத்தளிக்கிறார்கள். அவர்களின் நிலை



மையோ திரிசங்கு சொர்க்கம் ஆகிவிடுதலும் உண்டு.

அடிக்கடி உலகினை உலுப்பும் கொள்கலன் மரணங்கள் பரிதாபகரமானவை. இங்கிலாந்துக்குப் புறப்படுகிறவர்கள் பெருமெடுப்பில் செலவு செய்து பாடுபட்டு பல நாடுகளைக் கடந்து இறுதியில் அவ்விடத்தை நெருங்கும்போதுதான் - டோவர் கால்வாயில் வைத்துத்தான் - மரணம் சம்பவிக்கின்ற பரிதாபம் அடிக்கடி நிகழுகின்றது.

தப்பியோரையும் விதி விட்டுவிடுவதில்லை. அவரவர் எடுப்பாக வாழவெனப் புகுந்த இடங்களில் பல்வித சிக்கல்கள் சந்திக்கத்தான் செய்கின்றன. திடீர் மரண அறிவித்தல்களில் கணிசமான பங்கு வெளிநாட்டுத் தகவல்களாகத்தான் இருக்கின்றன. விபத்துக்களுக்கும் நோய் நொடிகளுக்கும் அங்கே குறைவில்லை.

சொந்த மண்ணிலே மருந்துக்குத் தட்டுப்பாடு என்றால் நாட்டு வைத்தியமாதல் கிடைக்கும். புகுந்த மண்ணிலே வரும் நோய்க்கு மருந்தே இல்லை என்ற நிலைமை. ஷெல்லுக்குப் பயந்தோடி எங்கோ கல்லெறி வாங்கிச் செத்தவர்களும்



உண்டு. எனவே இங்கு மட்டும்தான் நிலைமை மோசம் என்றில்லை. மரணம் எங்கும் காத்திருக்கிறது. அதற்கான காரணங்கள்தான் வேறுபடுகின்றன.

வாழ்க்கைத் தரமும் செல்வமும் அதிகம் செழிக்கும் நாடுகளை நோக்கி உலகின் பலபாகங்களிலும் இருந்து மனிதர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு எவரும் விதிவிலக்கல்ல. அமெரிக்காவையும் ஆஸ்திரேலியாவையும் நோக்கிய ஆங்கிலேயரின் படையெடுப்பையும் மேற்கத்தைய மற்றும் செல்வந்த நாடுகளை நோக்கிய ஆசிய மற்றும் ஆபிரிக்கர்களின் படையெடுப்பையும் பார்த்தால் நிலைமை தெளிவாகத் தெரியும்.

அண்மைக் காலங்களில் ஐரோப்பாவில் குடியேறிய சுமார் பதினேழு மில்லியன் மக்கள் அங்கு சட்டபூர்வமான அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆண்டுதோறும் சுமார் பதினைந்து லட்சம் பேர் அங்கு மேலும் வாழத் தகுதிபெற்று வருகிறார்கள். பதிவுகள் ஏதுமின்றி இந்த நாடுகளுக்குள் ஆண்டுக்கு சுமார் ஐந்து லட்சம் பேர் களவாக நுழைந்து விடுகிறார்கள். ஐம்பது லட்சம் பேர் (ஐந்து மில்லியன்) இவ்வாறு இரகசியமாக அங்கெல்லாம் பதிவின்றி வாழுகிறார்கள்.

ஐரோப்பாவிற்குள் நுழைபவர்களை விட அமெரிக்க, ஆஸ்திரேலிய மற்றும் மத்திய கிழக்கு அல்லது ஆபிரிக்க, ஏன் வேறு அகப்பட்ட நாடெல்லாம் போய் குடியேறிவிடத் துடிக்கும் மக்களின் தொகை கணிசமாகப் பெருகிவருகிறது. அக்கரை பச்சைதானே!

### ஏன் இந்தப் படையெடுப்பு?

காரணம் மேற்கு நாடுகளின் செழிப்பும் ஸ்திரத்தன்மையும் உற்பத்திகளும் தொழில் வாய்ப்புக்களுமே அங்கு பலரைக் கவருகின்றன. அந்த நாடுகளில் சனத்தொகைப் பெருக்கமோ மிகவும் அரிதாகவே இருக்கிறது. அதேவேளை பெருமளவில் அங்கு கறுப்பர்கள் (நம்மவர்களும்தான்) குடியேறி வருகிறார்கள். அவர்களும் கட்டுப்பாடற்ற சனத்தொகைப் பெருக்கத்தைக் கொண்டிருக்கும் நாடுகளில் இருந்தே வருகிறார்கள். எனவே மேற்கு நாடுகளில் வெள்ளையர்களைவிட கறுப்பர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது என்ற அச்சமும் தமது நாடு காலப்போக்கில் பறிபோய் விடுமோ என்ற ஏக்கமும் வெள்ளையர்களிடையே எழாமல் இல்லை. உண்மையில் தமது பிரதேசத்தில் வாழமுடியாத ஓர் அச்சுறுத்தலுக்காக இந்த அகதிகள் தமது நாட்டுக்குள் படையெடுப்பதாக வெள்ளையர்கள் நம்பவில்லை. படையெடுப்பிற்கான காரணம் பொருளாதார நோக்கம் கொண்டது என்ற வெள்ளையர்களின் எண்ணத்தை பொய் என்றும் கருதமுடியாது.

மாறாக ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளிலோ வறுமை, உள்நாட்டு யுத்தங்கள், அரசியல் கெடுபிடிகள்,மனிதஉரிமை மீறல்கள் என்று பல இடர்களின் மத்தியிலேதான் மக்கள் வாழ்க்கையை ஓட்டி வருகிறார்கள். வேலை வாய்ப்பின்மை பெருமளவில் காணப்படுகிறது. எனவே வாழ வழியின்றி தவிப்பவர்கள் எப்பாடுபட்டாவது அரசியல் காரணங்களைச சாட்டாக வைத்து அகதிகள் என்ற போர்வையில் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குள் புகுந்து கொள்கிறார்கள். இவர்கள் ஆசியாவில் இருந்து தரைவழித் தொடர்புடைய ஐரோப்பிய நாடுகளுக்குள் யுத்த சூனியப் பிரதேசங்களையும் மலைகள் மற்றும் காட்டுப் பிரதேசங்களையும் வெகுதுணிச்சலாகக் கடந்து புகுந்துவிடுகிறார்கள். விமான மூலமும் ரயில் மூலமாகவும் சிலர் சொகுசாகவும் வந்து சேர்ந்துவிடுகிறார்கள்.

நாடுகளின் எல்லைகளை கால்நடையாகவும் சரக்கு வாகனங்களிலும் இரகசியமாகக் கடக்கத் துணிகிறார்கள். தனித்து வருபவர்களும் உண்டு. குடும்பமாகவே குடிபெயர்ந்து வந்துவிடுபவர்களும் உண்டு. அவரவர் துணிச்சலும் அதிர்ஷ்டமும்தான் இறுதியில் அவர்களைக் கரைசேர்க்கின்றன. சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்தும் கும்பல்கள் பெரிய ஏஜென்சிகளை நடத்துகின்றன. அவை பெருமளவு பணத்தை பேரம்பேசி ஆட்களை மேற்கு ஐரோப்பாவிற்குள் அனுப்பி விடுகிறன்றன.

சீனாவில் இருந்து மட்டும் ஆண்டொன்றுக்கு சுமார் 30 லட்சம் பேர் இந்த ஏஜென்சிகளை நம்பி ஐரோப்பாவுக்குள் புகுந்துகொள்ளத் துடிக்கிறார்கள். போகிற போக்கில் பார்த்தால் ஆசியாவே காலியாகி விடக்கூடும் என்ற அச்சம் எழத்தான் செய்கிறது. எங்கும் ஆளரவமின்றி பற்றைகளும் புதர்களும் மண்டிய வீடுகள் மலிந்துவிடக்கூடும். இதே வேளை தமது பிரதேசத்தில் உலகம் முழுவதும் திரண்டுவந்து குடியேறி நிம்மதிப் பெருமூச்சு விடுவதையிட்டு ஐரோப்பிய நாடுகள் கவலைகொள்ளத் தொடங்கியிருக்கின்றன. அவை தம்மிடம் அகதிகள் வந்துசேரும் அனைத்து வழிகளையுமே அடைத்துவிட முயலுகின்றன. தமது நாட்டுச் சட்டங்களை மறுசீரமைக்க நினைக்கின்றன.

ஆனால் ஆசியாவில் இருந்து புறப்படுபவர்களிடம் பெருமளவு பணத்தைச் சுருட்டும் முகவர்கள் ஏதாவது மலிந்த வழியில் ஆள்களை ஐரோப்பிய நாடுகளுக்குள் புகுத்திவிட நினைக்கிறார்கள். அவர்கள் தமது பயணிகள் பற்றிய எந்தப் பாதுகாப்புக் குறித்தும் சிரத்தை எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே ஐரோப்பிய நாட்டில் சட்டவிரோதமாக குடியேற நினைப்பவர்களின் உயிரோ துச்சமெனவே மதிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இத்தாலிக்குள் புக முனைந்த சுமார் இருநூறு பேர் அந்தக் கடற்பிரதேசத்தில் மரணத்தைத் தழுவி இருக்கிறார்கள். கரையோரக் காவல் படையினரிடமிருந்து தப்பிக்க நினைக்கும் கடத்தல்காரர்கள் தமது வள்ளங்களில் இருந்து ஆள்களைக் கடலில் தள்ளி விடுகிறார்கள். ஐரோப்பாவிற்குள் நுழைய முற்பட்டவர்களில் இவ்வாறு மரணமானோரின் தொகை இரண்டாயிரத்தைத் தாண்டக்கூடும் என்று கருதப்படுகிறது. இவர்கள் எல்லாம் தாயகத்தில் இருந்திருந்தால் கஞ்சி குடித்துக்கொண்டாவது நிச்சயம் உயிருடன் இருந்திருப்பார்கள்.

உள்நாட்டிலேயே இடப்பெயர்வு

# திரிசங்கு சொர்க்கம்!!

என்றதும் அகதிகளைக் கண்டு முகம் சுழிக்கும் மனோபாவம் சொந்த மக்களிடையே நிலவுகிறது. எவ்வாறு தான் ஆண்டுக்கு மூன்று லட்சம் அகதிகளை இத்தாலி ஏற்றுக்கொள்கிறதோ? சீனாவில் இருந்து ஆண்டொன்றுக்கு முப்பது லட்சம் மக்களைக் கடத்தும் முகவர்கள் அவர்களை எங்கெல்லாம் தள்ளி விடுகிறார்களோ?

அம்பிகா

சீனாவின் பியூஜியன் மாநிலத்தில் ஆண்களே இல்லாத கிராமம் ஒன்று இருக்கிறதாம். ஆண்கள் அனைவருமே கடல்கடந்து தொழில் தேடி களவாகச்* சென்றுவிட்டார்கள். ஓர் இருபது வயதுப் பையனை அங்கே கண்டால் ஏன் இன்னும் இங்கே இருக்கிறாய் என்று கேட்கிறார்களாம்.

### டோவர் கால்வாயில் பயங்கரம்

இங்கிலாந்துக்குள் நுழைய முற்படும் பலரும் டோவர் துறைமுகத்துக்கு வரும் சரக்குக் கப்பல்கள் மற்றும் பயணிகள் கப்பல்களிலேயே வந்து சேர்கிறார்கள். முதலில் ஐரோப்பாவின் மேற்கு கரையோரமான பிரெஞ்சு கடற்கரைகளை இவர்கள் வந்தடைகிறார்கள். அங்கு இங்கிலாந்துக்குள் நுழையக் காத்திருப்பவர்களுக்கான முகாம்கள் இருக்கின்றன. அங்கிருப்பவர்கள் எப்படியாவது இங்கிலாந்துக்குள் சென்றுவிடுவார்கள் என்ற நிம்மதியில் பிரெஞ்சுப் பொலீஸார் அவர்களுக்கு எந்தத் தொல்லையையும் தருவதில்லை.

கடற்கரையில் நின்று பார்ப்பவர்களுக்கு கடலைக் கடக்கும் பாரிய கப்பல்களின் காட்சி ஏக்கத்தை நெஞ்சில் விதைக்கும். முகவர்களிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து புறப்பட்ட பயணமோ இவ்வாறு இடையில் தரித்து நிற்கும்போது முகவரோ அவரிடம் கொடுத்திருந்த பணமோ உதவிக்கு வருவதில்லை. மாறாக தங்கி நிற்கும் இடங்களிலெல்லாம் இருந்து வீட்டுக்கோ நண்பர்களுக்கோ தொலைபேசியில் பணம் கேட்டு அழவேண்டும் என்பதே விதி. மறுகரையில் இங்கிலாந்து கண்ணுக்குத் தென்படும். டோவர் கால்வாயைக் கடக்க ஆளுக்கு 500 டொலர்கள் கேட்கிறார்கள். சுமார் பத்தாயிரம் பேர் இத்தகைய முகாம்களைக் கடந்து இங்கிலாந்துக்குள் நுழைந்து வருகிறார்கள். உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள மக்களை இந்த முகாம்களில் சந்திக்கலாம்.

முகாம்களுக்கு வருபவர்கள் அனைவருமே ஏதோ ஒரு வழியில் அங்கிருந்து இங்கிலாந்துக்கு புறப்பட்டும் விடுகிறார்கள். சிலர் இழுபட்டுக் கொள்ள பின்னே வந்தவர்கள் முந்திக்கொள்கிறார்கள்.

என்றாலும் இவர்கள் அனுப்பப்படும் முறையோ மிகவும் பயங்கரமானது. அண்மையில் ஒரு கொள்கலனில் 58 பேரின் சடலங்கள் இங்கிலாந்தை வந்தடைந்திருந்தன. தக்காளிப்பழப் பெட்டிகள் கொண்ட குளிரூட்டிக் கொள்கலன் ஒன்றில் அடைக்கப்பட்டு அனுப்பப்பட்ட 60 பேரில் 54 ஆண்களும் 4 பெண்களும் இறந்துகிடக்கக் காணப்பட்டனர். வாகனத்திலோ அல்லது டோவர் கால்வாயில் கப்பலிலோ வைத்து கொள்கலனின் காற்றுப்புகும் துவாரம் அடைக்கப்பட்டதனால் இவர்கள் மூச்சுத் திணறி இறந்திருக்கிறார்கள். இருவர் மாத்திரம் மயக்க நிலையில் காணப்பட்டு தெய்வாதீனமாக இங்கிலாந்தில் மீட்கப்பட்டிருக்கிறார்கள். மரணவிசாரணை அதிகாரியின் அறிக்கை இவர்களின் மரணம் மூச்சுத் திணறலால் ஏற்பட்டது என்பதை உறுதி செய்திருக்கிறது. அடைபட்ட துவாரத்தை அவர்களால் திறக்க இயலவில்லை. கொள்கலனின் சுவரை சப்பாத்துக் கால்களால் உதைத்து அவர்கள் போட்ட சத்தம் வெளியே கேட்கவில்லை.

இதே போன்ற ஒரு கொள்கலன் சம்பவத்தில் சீனாவில் பியூஜியன் பிரதேச மக்கள் மூன்றுபேர் இவ்வாண்டின் ஆரம்பத்தில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்கள். அண்மையில் இறந்த 58 பேரின் சடலங்கள் அடையாளம் காணப்படாத போதும் இவர்களிலும் பெரும்பாலானோர் சீனாவில் பியூஜியன் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கருதப்பட்டது. செய்தி பரவியதும் சீனாவில் பெருந்தொகையானோர் தமது உறவுகள் இதற்குள் அகப்பட்டனரோ என்று ஏங்கித் தவிக்கலாயினர். வீட்டில் இருந்து புறப்பட்ட பலரும் அவ்வப்போ தாம் இருக்கும் இடங்கள் பற்றி தகவல்களைத் தெரிவிக்க முடியாத நிலையில் இருப்பதனால் இறந்தவர்கள் பற்றிய ஊகங்களை இப்போதைக்கு தெளிவுபடுத்த இயலாது.



### எமது நிலைமை

இலங்கையில் இருந்தும் கணிசமான தொகையினர் ஏதோ காரணங்களுக்காக வெளிநாடுகளுக்குப் பயணமாகிறார்கள். அருகிலுள்ள இந்தியாவுக்கு ஆதல் முதலில் போய்விடுவோம் என நினைப்பவர்கள் மேற்கொள்ளும் கடற்பயணமோ படுபயங்கரமானது. அண்மைக்கால பத்திரிகைச் செய்திகள் நிலைமை மேலும் மோசமடைவதையே காட்டுகின்றன.

திசைமாறி வள்ளங்கள் போவதும் வழியில் எரிபொருள் தீர்ந்து விடுவதும் மீண்டும் தீவுப்பகுதிக்கே வந்தடையும்போது இந்தியாவில் காலடி பதிப்பதாகக் கனவு கண்டு ஏமாறுவதும் பழைய சமாச்சாரங்கள். இப்போது மணல் குன்றுகளில் ஓட்டிகள் அகதிகளை இறக்கிவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். சில மணற் குன்றுகள் இலங்கைக் கடற்பிரதேசத்துக்கு உள்ளேயே அமைந்து விடுதலால் அகதிகளால் அக்கரையை எட்ட இயலுவதில்லை.

மணற்குன்றுகளிலிருந்து அகதிகளை ஏற்றிச் செல்லும் இந்திய மீனவர்களின் தொல்லைகளுக்கோ குறைவில்லை. கணவனைக் கடலில் தள்ளிவிட்டு மனைவியைக் கடத்திச் சென்ற சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. படகு கவிழ்ந்து அனைவருமே பலியான சம்பவங்களும் நிறையவே நடந்தேறியிருக்கின்றன.

கொழும்புக்குச் சென்றால் எப்படியாவது பெண்ணைக் கரைசேர்த்து விடலாம் என்ற எண்ணம் இன்று யாழ்ப்பாணத்தில் நிலவுவதை தாராளமாகக் காணலாம். இதுவும் ஒரு வெளிநாட்டு மோகம்தான். மேலை நாடுகளில் இருக்கும் எமது இளைஞர்கள் எப்படியாவது ஒரு யாழ்ப்பாணப் பெண் கிடைத்தாலே போதும் என்ற மனநிலையில் இருப்பதற்கு காரணம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. அங்கே கிடைத்தாலும் பெண் வேண்டாம் என்று நினைக்கிறார்கள்.

கொழும்புக்கு சென்றுவிட்டால் மட்டும் எல்லாம் சுலபமாக கைகூடி விடுவதில்லை. நிச்சயிக்கப்பட்ட திருமணங்களைத் தொடர்ந்து சில நாடுகளுக்கு வசதியாக பெண்கள் சென்றுவிடுகிறார்கள். ஏனையவர்கள் கொழும்பில் தவங்கிடந்து முகவர்களின் கெடுபிடிக்கு ஆளாகித் தவிக்கிறார்கள். கெட்டும் பட்டணம் போ என்பார்கள். இது இன்றைய எமது சமூகத்துக்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அங்கு நடைபெறும் விடயங்களை பச்சையாகச் சொல்லி பத்திரிகையை மஞ்சள் ஆக்கிவிட முடியாது.

இத்தனை பாடுபட்டு வீடுவாசலை விற்றோ அல்லது வெளிநாட்டில் இருப்பவர்களிடம் கடன்பட்டோ உயிரைத் தவிர இழக்கக்கூடாதவற்றை எல்லாம் இழந்தோ பலர் ஒருமாதிரி வெளிநாடுகளில் கால் ஊன்றி விடுகிறார்கள். இனி மேல் வாழ்க்கை சொர்க்கம்தான் என்றில்லை. சமுதாயத்துக்கு அஞ்சி ஒழுக்கமாக வாழும் மனோபாவம் அந்த நாடுகளில் இளைஞர்களிடையே பெரிதும் அற்றுப்போய்விட்டது.

சொந்த மண்ணிலே கௌரவம் பார்க்கும் பலரும் வெளியே செய்கின்ற தொழில்கள் பற்றி மூச்சும் விடுவதில்லை. எதையாவது செய்து பிழைத்தால் போதும் என்ற மனநிலை ஏன் இங்கு வர மறுக்கிறதோ? அப்படிப் பிழைப்பதானால் இங்கும் பிழைக்கலாம்.

அங்கெல்லாம் சென்று நிரந்தர அந்தஸ்து பெற்றுவிட்டவர்களின் நிலைமை என்ன என்பதும் தெளிவுதான். 'கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகாது'. ஆங்கிலம் சரளமாகப் பேசினாலும் கறுப்பர் கறுப்பர்தான். அவர்களது கலாசாரம் மட்டும் அடுத்த சந்ததியில் எம்மவரிடம் அப்படியே ஒட்டிக்கொள்வது தான் மிச்சம். பாரத்தைக் குறைக்கிறோம் என்று பிள்ளைகளையும் சந்ததியையும் அந்தக் கலாசாரத்துக்கும் அடிமைத் தனத்துக்கும் நிரந்தரமாக விற்றுவிட நினைப்பவர்கள் தமது நிம்மதியை மட்டுமே கருத்தில் எடுக்கிறார்கள். ஆசிய நாடுகளைவிட அங்கெல்லாம் வாழ்க்கைத்தரம்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் ஆணையாளர் பதவி நீக்கப்பட்டால் பொதுத்.தேர்தலை ஜே.வி.பி. பகிஷ்கரிக்கும்!

கொழும்பு,செப்.17

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க பதவிநீக்கம் செய்யப்பட்டால் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக்கொள்ளும்.

ஜே.வி.பியின் செயலாளர் டில்வின் சில்வா மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் நியாயமாகப் போட்டியிட்டால் வெற்றி பெறமுடியாது என்பதை உணர்ந்துதான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனக்குத் தடையாக உள்ளவர்களை அகற்றும் பணியில் தற்போது தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாகவே தேர்தல் ஆணையாளர் மீது "ஸ்ரிக்கர்" விவகாரம் குறித்துக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதும் தேர்தல் ஆணையாளர் கடமைக்குத் திரும்பமுடியாத வகையில் அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தலில் பெரும் வாக்கு மோசடிகள் இடம்பெற்றன.

இந்த வாக்கு மோசடிகளே சந்திரிகா குமாரதுங்க மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படுவதற்குக் காரணம் ஆகும். அவ்வாறானதொரு மோசடியை எதிர் வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போதும் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளைச் செய்திருந்தது. எனினும் தேர்தல் ஆணையாளரின் இரகசியமான நடவடிக்கைகளினால் அத்தகைய மோசடிகள் தடுக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிந்துகொண்டே அவர் மீது போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

எனவே நேர்மையானதும், நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது என்பதை நிரூபிக்க வேண்டுமானால் தேர்தல் ஆணையாளர் எந்தக் காரணம் கொண்டும் பதவிநீக்கம் செய்யப்படமாட்டார் என்பதை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

அவ்வாறான பகிரங்க அறிவிப்பை விடுக்க ஜனாதிபதி முன்வராவிட்டால் தேர்தல் மோசடிகள் இடம்பெற அவரே அனுமதி வழங்கியதாக அமைந்துவிடும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# தேர்தல் ஆணையாளருக்கு எதிராக எவரும் நீதிமன்று செல்ல முடியாது!

## சட்ட வல்லுநர்கள் தெரிவிப்பு

கொழும்பு,செப்.17

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின்படி தேர்தல் ஆணையாளருக்கு எதிராக எந்த அரசியல்வாதியும் நீதிமன்றம் செல்ல முடியாது என்று தென்பகுதி சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

வாக்காளர் அட்டைகளுக்கான "ஸ்ரிக்கர்"களை அச்சிட்ட விவகாரம் தொடர்பாக- தேர்தல் ஆணையாளருக்கு எதிராக - நீதிமன்றம் செல்லச் சிலர் முயற்சிப்பதாகக் கூறப்படுவது பற்றிக் கருத்துக் கேட்டபோதே சட்ட வல்லுநர்கள் மேற்கண்டவாறு கூறியதாக "திவயின" பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

தேர்தல் நடைபெறும் சமயத்தில் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக எவராவது வழக்குத் தாக்கல் செய்வார்களாயின் அது கேலிக் கூத்தாகவே அமையும் என்று சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-186)

# மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்கள் வாக்களிப்பதற்கு வசதி

மட்டக்களப்பு,செப்.17

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வசிக்கும் வாக்காளர்களுக்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு தொகுதியில் செங்கலடி மகாவித்தியாலயம், வவுணதீவு மகாவித்தியாலயம் - பட்டிருப்புத் தொகுதியில் பட்டிருப்பு மகாவித்தியாலயம், செட்டிப்பாளையம் மகாவித்தியாலயம் - கல்குடா தொகுதியில் மாங்கேணி மகாவித்தியாலயம், வாழைச்சேனை இந்துக்கல்லூரி, வந்தாறுமூலை ஸ்ரீ மகா விஷ்ணு வித்தியாலயம் ஆகியவையே விசேடமாக அமைக்கப்பட்டுள்ள கொத்தணி வாக்களிப்பு நிலையங்களாகும். (இ-8)

# வேட்பாளர் தம் விருப்பப்படி சென்று வாக்குக் கேட்க முடியாத நிலைமை!

## மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம்.பி கவலை தெரிவிப்பு

கொழும்பு,செப்.17

வேட்பாளர்கள் தமது விருப்பப்படி சென்று வாக்காளர்களிடம் வாக்குக் கேட்க முடியாத நிலைமை இன்று நிலவி வருகின்றது. 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் நமது நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தமே இதற்குக் காரணம். யுத்தம் முடிவுக்குக் கொண்டு ஏற்பட்ட பின்னரே சுதந்திரமான தேர்தலை நடத்த முடியும்.

மட்டக்களப்பில் கோட்டைக் கல்லாறில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் பொன். செல்வராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஓர் இக்கட்டான சூழ்நிலையில் இன்று தேர்தல் நடைபெறுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ.தே.கட்சியும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தும் அது வெற்றி தரவில்லை. இரண்டு கட்சிகளாலும் தமிழ் மக்களின் உண்மையான அபிலாசைகளை நிறைவேற்ற முடியவில்லை.

இரண்டு கட்சிகளும் தமக்குள் இழுபறிப்பட்டன. பொதுமக்கள் ஐக்கிய முன்னணி 1994ஆம் ஆண்டு புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை முன்வைக்க நடவடிக்கை எடுத்தது. எனினும் அது கடைசியில் கடந்த மாதமே அரசமைப்புச் சீர்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது.

பிரச்சினையுடன் சம்மந்தப்பட்டவர்களுடன் தான் பேச்சுக்கள் நடத்த வேண்டும். அவர்களுடன் தான் ஒப்பந்தங்களைச் செய்ய வேண்டும். அப்போதுதான் பிரச்சினைக்குரிய நல்ல தீர்வினைக் காண முடியும்.




அதை விடுத்து அரசியல் லாபம் கருதி பிரச்சினை உள்ளவர்களை உதறித் தள்ளிவிட்டு பிரச்சினை இல்லாதவர்களுடன் பேச்சுக்களை நடத்தி தற்போதைய அரசு அரசமைப்புச் சீர்திருத்தத்தை முன்வைத்தது.

இதன் காரணமாக அதனை ஒத்திவைக்க வேண்டிய அவலம் தற்போதைய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அரசால் முன்வைக்கப்பட்ட இந்த அரசமைப்புச் சீர்திருத்தம் ஆலம் பழம் போன்றது. தமிழ் மக்களின் அபிலாஷைகள் எதுவும் இதில் இடம் பெறவில்லை திம்புக் கோட்பாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்கள் கூட இதில் இடம்பெறவில்லை.

இதனாலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இதனை எதிர்த்தது - என்றார். (இ-8)

# ரணில், பிரதமருடன் விவாதம் நடத்துவதே பொருத்தம்!

## அமைச்சர் மங்கள சமரவீர கருத்து

கொழும்பு,செப்.17

பிரதமர் பதவிக்கான வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்க விவாதம் நடத்துவதாயின் அதற்குப் பொருத்தமானவர் அதே பதவிக்குப் போட்டியிடும் ரட்ணசிறி விக்கிரமநாயக்கதான். எனவே அவருடன் ரணில் விவாதம் நடத்தட்டும்.

தபால் தொலைத் தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளுக்கு தேசியப் பட்டியலில் இடமளித்தது தொடர்பாக பகிரங்க தொலைக்காட்சி விவாதத்துக்கு வருமாறு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்திருந்தார். அது தொடர்பாக கருத்துக் கூறிய போதே அமைச்சர் மங்கள சமரவீர இப்படிக் கூறியுள்ளார்.

ஐ.தே.க தலைவர் ரணில் ஜனாதிபதியை விவாதத்துக்கு அழைக்கிறார். ஆனால் நடக்கவிருப்பது ஜனாதிபதித் தேர்தல் அல்ல பொதுத் தேர்தல் தான் என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (ஐ-20)

# மக்களை ஏமாற்றினால் அரசைக் கவிழ்ப்போம்!

## ஜே.வி.பி. செயலர் கூறுகிறார்

கொழும்பு,செப்.17

நடைபெறவுள்ள தேர்தலில் அரசாங்கம் மக்களை ஏமாற்றுமாயின் ஜனநாயக வழிமுறைகளைப் பயன்படுத்தி அரசாங்கத்தைக் கவிழ்ப்போம்.

ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார். நிப்போன் ஹோட்டலில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

தேர்தலில் மக்களை ஏமாற்றுவதற்கு அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு 'ஸ்ரிக்கர்' முறை இடையூறாக இருக்கும் என அரச தரப்பினர் கருதுகின்றனர். தேர்தல் ஆணையாளரைப் பதவி நீக்கம் செய்ய அவர்கள் எடுக்கும் முயற்சிகளைத் தோற்கடிப்பது மக்களின் கடமை. அரசு மக்களை ஏமாற்றுமாயின் அரசுக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்துவோம். ஹர்த்தால் நடத்துவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஐ-20)

# ஆயுதங்களுடன் பிரசாரம் செய்வோர் கைதாவர்

## பொலீஸ்மா அதிபர் அறிவிப்பு

கொழும்பு,செப்.17

ஆயுதங்களுடன் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவோரைக் கைது செய்யும்படி பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு சகல பொலீஸ் நிலையங்களுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பிரசாரக் கூட்டங்கள் மற்றும் பிரசார வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடலாம் எனக் கிடைத்த தகவலை அடுத்தே பொலீஸ்மா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார் என பொலீஸ் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இதேவேளை சில இடங்களில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஏனைய கட்சியினருக்கு எதிராகத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி தேர்தல் வன்முறைகளில் அதிகம் ஈடுபட்டுவருகின்றனர் எனவும் -

இந்த வன்முறைகளுக்கு, அரசாங்கத்தினால் தனிப்பட்ட பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மட்டுமன்றி சட்டவிரோத துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-7)

# தேர்தல் காலத்தில் வன்முறைகள் அதிகரித்தால் எம்.பிக்கள், மாகாணசபை உறுப்பினரின் ஆயுதங்கள் அனைத்தும் மீளப்பெறப்படும்!

கொழும்பு,செப்.17

தேர்தல் காலத்தில் வன்முறைகள் அதிகரிக்குமானால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கும் ஆயுதங்கள் அனைத்தும் மீளப்பெறப்படும் என்று தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் ரி.பி. சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பல்வேறு அமைச்சர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகவும் -

அதனைக் கருத்திற் கொண்டே முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாணசபை உறுப்பினருக்குமாக மொத்தம் 15 ஆயிரம் துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தகவல் வெளியிட்டார். (உ-20)

# விசேட அதிரடிப் படையினரும் தேர்தல் பாதுகாப்புக் கடமையில்!

கொழும்பு,செப்.17

பொதுத் தேர்தல் பாதுகாப்புக் கடமைகளில் விசேட அதிரடிப்படையினரும் ஈடுபடுத்தப்படுவர் என்று விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட அதிகாரியும், பதில் பொலீஸ்மா அதிபருமான நிமால் குணதிலக தெரிவித்துள்ளார்.

கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் வாக்களிப்பு நிலையங்களில் பொலீஸாருக்கு உதவியாக இவர்கள் கடமையாற்றுவர். வாக்களிப்புத் தினத்தன்று வீதி ரோந்து நடவடிக்கைகளிலும் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-186)

# தேசிய ஐக்கிய முன்னணியின் வேட்பு மனுவை நிராகரிக்குக!

## மட்டக்களப்பில் ஐ.தே.க. கோரிக்கை

மட்டக்களப்பு,செப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுவை நிராகரிக்குமாறு ஐ.தே.கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் அலி ஸாகிர் மௌலானா கோரியுள்ளார். மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப் போவதாகவும் அவர் கூறினார்.

தேசிய ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைமை வேட்பாளர் செல்லையா இராசதுரை நாட்டில் இல்லாத போதும் அவரது கையொப்பம் வேட்பு மனுப் பத்திரத்தில் இடப்பட்டுள்ளது என்றும் -

அவசரகாலச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட சிவஞானம் அகிலேஸ்வரன் என்பவரது கையொப்பமும் வேட்பு மனுப்பத்திரத்தில் உரிய முறையில் பெறப்படவில்லை என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

# பேராயர் கோரிக்கை

கொழும்பு,செப்.17

கிறிஸ்தவ தேவாலயங்களை அரசியலுக்குப் பயன்படுத்த அரசியல்வாதிகளை அனுமதிக்கக் கூடாது. மேற்கண்டவாறு இலங்கைக் கத்தோலிக்கப் பேராயர் நிக்கிலாஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ கிறிஸ்தவ மதகுருமாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-9-8)

# கூட்டணியினர் மீது ஈ.பி.டி.பி. கண்டனம்

கொழும்பு,செப்.17

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தமிழ்க் குழுக்களிடம் உள்ள ஆயுதங்களை அரசு களைய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறது தமிழர் விடுதலைக் கூட்டணி. ஆனால் ஆரம்பத்தில்-1983 காலப் பகுதியில் 500 வரையான இளைஞர்களுக்கு கூட்டணியினர் ஆயுதப் பயிற்சி வழங்கி வடக்கு-கிழக்குக்கு அழைத்து வந்தனர். இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அவசரகாலச் சட்டம் நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் உரையாற்றும் போது, ஆயுதங்களை தாம் வைத்துவிட்டதாகவும் அவை தமது பாதுகாப்புக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

## OXFORD INSTITUTE

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**இந்துநாகரிகம்**

**A/L 2002**

விரிவுரையாளா:

**திருமதி S. அருள்நங்கை**

அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

வகுப்புகள் ஆரம்பம்: 29-09-2000
வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி.

தொடர்புகளுக்கு: நிர்வாகி
பா. மணிவண்ணன்

(78264)

---

**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
**VADDUKODDAI**

British Computer Society Classes for April 2000 Exams Commence on 25 th September 2000.
Please register by 22nd September.

Director,
**Jaffna College Institute of Technology**
Vaddukoddai.

(C/12940)

---

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## 09 ஆம ஆண்டு நிறைவு விழா

நாள்: 19-09-2000 செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 11 மணி (புதிய நேரம்)
இடம்: தலைமைச் செயலகம்
(317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.)

அங்கத்தவர்கள் அனைவரும் தத்தமது குடும்பத்தினருடன் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*நிர்வாகத்தினர்*
*யாழ். மா. பே. உ. ச.*

(C/12950)


---

## கலைவாணி நகைமாடம்

ஆதரவில்
பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க
அனுமதியுடன்

## பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

## நடத்தும்



**உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 2000**

இடம் : திக்கமுனை மைதானம்
காலம் : இன்று (2000 – 09 – 17) ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 4.00 மணி

### அரை இறுதி ஆட்டங்கள்

| | |
|---|---|
| 01 | வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகம் 'A' எதிர் வதிரி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம். |
| 02 | அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் எதிர் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் |

*அனைவரையும்*
*அன்புடன் அழைக்கின்றோம்.*

*செயலாளர்*
*பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.*

(C/12955)

---

### படுக்கை விரிப்புக்கள் கையளிப்பு

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் வல்வெட்டித்துறை தீருவில் அகதி முகாமில் தங்கியுள்ள 45 குடும்பங்களுக்குத் தலா ஒவ்வொரு படுக்கை விரிப்புக்கள் வழங்கப்படவுள்ளன. நாளைமு.ப.11மணிக்குபருத்தித்துறை பிரதேசசெயலர் ஆ.சிவசுவாமி இப்படுக்கை விரிப்புகளை குடும்பத் தலைவர்களிடம் கையளிப்பார்.

---

### தாயகத்தை....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயர்ச்சிதான் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இங்கு சைக்கிளுக்குக் கிடைக்கும் மதிப்பு அங்கு காருக்கும் கிடைக்காது.

மிகவும் பிஸியான வாழ்க்கையில் அதற்கும் இதற்கும் ஆலாய்ப் பறக்கவே நேரம் போதாது. வருமானம் அதிகமாக இருந்தாலும் எதற்கெடுத்தாலும் செலவுகளும் அதிகமாகத்தான் இருக்கும்.

வயதான காலத்தில் பெற்றோரைத் திருப்திப்படுத்த நினைத்து அவர்களைத் தமது நாடுகளுக்கு அழைத்துவிடும் பலராலும் அவர்களைத் திருப்திப்படுத்த இயலுவதில்லை. பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் பழக்க வழக்கங்கள் பெருமளவில் மாறுபடுவது கண்டு அவர்கள் கலங்கி நிற்கிறார்கள். கடும்குளிரான நாடுகளில் சமாளிக்க முடியாமல் அநேகர் திரும்பி விடுகிறார்கள். தங்குவோர் விரைவில் நோய் வாய்ப்படுகிறார்கள்.

வெளியில் சென்றவர்கள் எல்லாரும் சொகுசாக உழைத்துக் குவிக்கிறார்கள் என்றில்லை. ஆனால் இங்கிருக்கும் அவர்களது உறவினர்கள் தொலைபேசியில் நிலைமை பற்றியெல்லாம் இல்லாததும் பொல்லாததும் சொல்லிச் சுரண்டி சொகுசாகக் காலம் கடத்தும் நிலைமையை கொழும்பு விடுதிகளில் தாராளமாகக் காணலாம்.

ஊருக்குத் திரும்ப நிலைமை சரியில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டே வெளிநாட்டு மச்சான், மாமன், மருமகன் உழைப்பில் கொழும்பில் படம் பார்த்துக் காலம் கடத்தும் சுகம் எந்த நாட்டுக்குச் சென்றாலும் கிடைக்காது. இவர்களுக்கோ ஊருக்கு வந்தாலும் விடியாது. காலிவீதியிலும் ஹோட்டல் வாசலில் சாரக்கட்டுடன் குந்தியிருந்து அரட்டை அடிக்கும் வசதி உள்நாட்டு உழைப்பில் கிட்டுமா?

### குளிக்கப் போய் சேறு பூசலாமா?

தாயகத்தில் தமது கலாசாரம் பறிபோகிறது, வேலைவாய்ப்பு இல்லை, பாதுகாப்பு இல்லை, நிம்மதி இல்லை, வன்முறைகள் பலவிதம் என்றெல்லாம் கூறப்படும் காரணங்கள் தப்பிப்போக ஒரு சாட்டு என்றே கொள்ளலாம். இவர்களின் இலக்கு சொகுசான சுரண்டல் வாழ்க்கை என்றால் மிகையாகாது.

பிறநாடுகளில் செல்லுமிடமெல்லாம் இவற்றுக்கு உத்தரவாதம் கிடைக்கும் என்றில்லை. ஏதோ புரியாத அன்னிய பாஷை எல்லாம் காலங்கடந்து விழுந்தடித்துப் படித்து பாடுபடும் அவலம் சொல்லிமாளாது. ஆங்கிலம் படித்தால் கூட பரவாயில்லை என்று விட்டுவிடலாம்.

கல்வித் தரமும் பண்பாடும் உயர்ந்தே நிற்கும் பாரம்பரிய மண்ணிலிருந்து விடுபட்டுவெளிநாட்டில் வதியும் கணவனிடம் போகவென்று பல ஆண்டுகாலம் கொழும்பில் காலங்கழிக்கும் தாய்மார் தமது பிள்ளைகளின் இளமைப் பருவத்தைச் சிதறடிக்கும் சமூகத் துரோகத்தை இன்று சாதாரணமாகக் காணலாம். இங்கிருந்தால் முன்னேற முடியாது என்று மேதாவி போல் அவர்கள் பேசுவதைக் கேட்டால் வேறு வேடிக்கையாக இருக்கிறது.

தொலைபேசித் தொடர்புகளுக்கும், சுலபமாகப் பணத்தைத் தருவித்துத் தாராளமாகச் செலவு செய்துகொள்ளவும், பல ஆண்டுகள் தொடர்ச்சியாக லொட்ஜ் சீவியம் என்று காலங்கழிக்கவும் நாட்டு நிலைமை நல்ல சாட்டு. இதனால் உருப்படியாக வளர வேண்டிய வயதில் உருக்குலையும் தமது சிறார்கள் பற்றிக்கூட கவலைப்படாத பெற்றோரின் நிலைமை மேலும் கேலிக்கூத்துத்தான். இத்தகைய நாடு கடந்த ஓட்டம் பற்றிய ஒரு சமுதாய விழிப்புணர்வு ஏற்படாதவரை எமது தனித்துவம் ஆற்றில் கரைத்த புளி போல அடையாளமின்றிச் சிதறிப் பரவிச் சிதைந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை. தமிழும் தமிழ் மரபும் தெரியாத பல தமிழர்களைப் பற்றியெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட சந்ததிகள் இன்னும் நிறையவே உருவாகும் வாய்ப்புக்களே அதிகம் தென்படுகின்றன. ★

---

## போசாக்குக் கருத்தரங்குகள்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போசாக்கு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போசாக்குக் கல்வி சம்பந்தமான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு வரும் 23ஆம் திகதி நாரந்தனை றோ.க. பாடசாலையிலும் - தாய்மாருக்கான கருத்தரங்கு வரும் 25ஆம் திகதி ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் - அரச சார்பற்ற நிறுவன ஊழியருக்கான கருத்தரங்கு வரும் 28ஆம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் - கிராமிய போசாக்கு சம்பந்தமான கருத்தரங்கு 29ஆம் திகதி மேற்கு நடராஜா ம.வியிலும் நடைபெறவுள்ளன. சகல கருத்தரங்குகளும் காலை 9.00 மணி - பிற்பகல் 2.00 மணிவரையும் நடைபெறவுள்ளன.

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

அராலி வடக்கு
ஸ்ரீ நடராஜர் தேவஸ்தானத்தைச் சேர்ந்த
**கமலநாதசர்மா - விமலாதேவி**
தம்பதிகளின்
செல்வப் புதல்வன்



## செல்வன யதுஷன்

இன்று (17-09-2000) ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை மாவடி கந்தசாமி கோயிலடியில் உள்ள தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், மாமிமார், தாத்தா, பாட்டி, மாமா, சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சித்தங்கேணி ஸ்ரீ மஹா கணபதியின் அருட் கடாட்சத்துடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நா. கமலநாதசர்மா - விமலாதேவி
குடும்பத்தினர்.

*ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் கோயில்,*
*சித்தங்கேணி.*

(C/12947)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

செல்வன்

## ஈஸ்வரக் குருக்கள் நிஷதராஜா

காரைநகர், நீலிப்பந்தனையைச் சேர்ந்த
ஈஸ்வரக் குருக்கள் - யோகேஸ்வரி தம்பதிகளின்
அருந்தவப் புதல்வன்
ஈஸ்வரக் குருக்கள் நிஷதராஜா

இன்று (17-09-2000) ஞாயிற்றுக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை காரைநகர், நீலிப்பந்தனையில் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார்.

இவரை பப்பா, அம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், தாத்தா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், மைத்துண்மார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் காரைநகர் ஈழத்துசிதம்பரம் தில்லையம்பல நடராஜப்பெருமான் சமேதர சிவகாமி அம்பாள் அருள், ஆற்றல் பெற்று சுந்தரேஸ்வரப் பெருமான் சமேதர சௌந்தராம்பிகை அம்பாள் அருட்கடாட்சத்துடன் வெகுவிரைவில் கனடா சென்று, சீரும் சிறப்பும் பெற்று, பல் கலைகளும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அன்பு பப்பா: **ஈஸ்வரக் குருக்கள்**
அன்பு அம்மா: **யோகேஸ்வரி**

விஸ்வநாதஐயா ஈஸ்வரக் குருக்கள்
பிரதம குரு
*காரைநகர் ஈழத்து சிதம்பரம் சிவன் கோயில், காரைநகர்.*

(78438)

---

இன்று

*சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் அரங்கில்*

மேடையேறுகின்றது

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வழங்கும்
எமது தேசத்தின் வாழ்வியல் அவலங்களின் தரிசனம்

**'அக்கினிப் பெருமூச்சு'**

*(நாடகமல்ல ஜீரணிக்க முடியாத உண்மை)*

(78459)

# தமிழில் வாக்கு மூலம் அளிக்கும் வசதி யாழ். மக்களுக்கு கிடைக்கவில்லை

## ஜனாதிபதிக்கு முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப். 17

இலங்கை அரசமைப்பில் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தாய்மொழியான தமிழிலேயே வாக்கு மூலம் அளிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, துரதிர்ஷ்ட வசமாக இந்த நடைமுறை யாழ். மாவட்டத்தில் இயங்கும் பொலீஸ் நிலையங்களில் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்று அனுப்பி வைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொலீஸ் நிலையங்களில் தமிழ் பேசும் மக்கள் வாக்கு மூலம் பதிவு செய்தல் என்ற தலைப்பில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்ட அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பொலீஸ் நிலையங்களில் தமிழ் மக்கள் அளிக்கின்ற வாக்கு மூலங்கள் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பதிவு செய்யப்பட வேண்டும் என்பது முக்கியமானதும் அத்தியாவசியமானதும் ஆகும்.

இந்த நடைமுறை வாக்கு மூலம் அளிப்பவர்கள் கையொப்பம் இடும்போது தாம் வழங்கிய வாக்கு மூலத்தை வாசித்து விளங்கிக் கையொப்பமிட வசதியாக இருக்கும்.

இந்த விடயமாக அரசாங்கமும், இலங்கை அரசமைப்பும் தமிழ் பேசும் மக்கள் தங்கள் சொந்த மொழியான தமிழிலேயே வாக்கு மூலம் அளிக்க வசதி செய்துள்ளன. துரதிர்ஷ்டவசமாக இந்த நடைமுறை யாழ். மாவட்டத்தில் இயங்கும் பொலீஸ் நிலையங்களில் கடைப்பிடிக்கப்படுவதில்லை.

ஜனாதிபதி அவர்களே, இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுசமத்துவத்துக்கும் நீதிக்குமான பெயரில் மிகவும் விநயமாக வேண்டுகின்றோம்.

இம்முன்னேற்றகரமான நடவடிக்கையானது சமாதானத்தையும் நல்லெண்ணத்தையும் மேலோங்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-9)

## இடம் பெயர்ந்த பாடசாலை மாணவருக்கு உதவிப் பொருள்

யாழ்ப்பாணம், செப். 17

யுத்தம் காரணமாக தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில் இயங்கிவரும் பாடசாலைகளுக்கும் அங்கு கற்கும் மாணவருக்கும் இலவச சீருடைகள், பாடப் புத்தகங்கள், பாடசாலைஉபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையை ஈ.பி.டி.பி. கட்சி மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரனாவுடன் தொடர்பு கொண்டு இடம் பெயர்ந்த மாணவர்கள், பாடசாலைகள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறியதன் விளைவாக சுமார் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு மேற்படி உதவிகளை வழங்க கல்வி அமைச்சு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

இடம்பெயர்ந்த பாடசாலைகள் தமது கல்விச் செயற்பாட்டை எவ்வித தங்குதடையும் இன்றி மேற்கொள்ள சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும், சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி போதியளவு நிதி இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(ஐ-9)

## சமய சந்நிதிகளில்

யாழ். குடாநாட்டில் உள்ள விநாயகர் திருக்கோயில்களிலும், விநாயகர் விக்கிரகம் உள்ள ஆலயங்களிலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலையிலும் மாலையிலும் ''சங்கடஹர சதுர்த்தி''த் திருவிழா விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும்.

(க-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 17

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் மஹாகணபதி ஹோமம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நடைபெறும். பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்திக் குருக்கள் "சங்கடஹர சதுர்த்தி விரத மகிமை, என்னும் பொருள் பற்றி நிகழ்த்தும் சொற்பொழிவு கணபதி ஹோமத்தைத் தொடர்ந்து இடம் பெறும்.

(இ-ரி)

## நாட்டார் இசை மாலை

பாரம்பரியக் கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இலங்கை வானொலி யாழ்.சேவையில் இன்று இரவு 9.30 மணி தொடக்கம் 10 மணி வரை இடம்பெறும். நாட்டார் இசை மாலையில் நெடுந்தீவு கலாசார சபையைச் சேர்ந்த பெண் கலைஞர்களின் நாட்டுக் கூத்துப் பாடல்கள் இடம்பெறும்.

நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பகுதிக்கான உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகத்தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ-7)

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் செல்வமணி

சாவகச்சேரி, கற்குளி, முதலாம் ஒழுங்கையைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் செல்வமணி (இச்சாண்) 12-9-2000 அன்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் கா. சி. ஆறுமுகம் (Rtd. Gvut. Auditor) அவர்களின் அன்பு மனைவியும், செல்வமலர் (அமெரிக்கா), விஜிபலக்ஷ்மி (பட்டி-ஆசிரியை, கொழும்பு), கதிர்காமநாதன் (ஆஸ்திரேலியா), Dr. புவிநாதன் (லண்டன்), அனுஷா (கனடா), யோகேந்திரா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16-9-2000) சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
M. சிறீதரன்

Mrs. T. Vijiyaluxmy.
70A, Fussels Lane.
Colombo- 6. T. P. No. 075 - 514280.

(78466)

## சிக்கன கடனுதவி கூ. சங்கம் அமைப்பு

காரைநகர், செப். 17

காரைநகர் தெற்கில் சிக்கன சேமிப்புக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம் கடந்த புதன்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

காரைநகர் தெற்கு பதில் கிராம அலுவலர் கே. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட சி. க, கூ. சங்க சமாச நிர்வாக உறுப்பினர் க. திருச்செல்வம், ஊர்காவற்றுறை பிராந்திய சமாச உதவியாளர் செல்வி தி. ஜெயமலர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்தச் சங்கத்தின் தலைவராக எஸ். ஆறுமுகமும், உபதலைவராக திருமதி அ. இளகேஸ்வரியும், செயலாளராக திருமதி வா. தனலட்சுமியும், பொருளாளராக செல்வி தி. ஜெயமலரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-73)

## காரைநகரில் நாய்களுக்கு தடுப்பூசி

காரைநகர், செப். 17

காரைநகரில் எதிர்வரும் 20 ஆம், 22 ஆம் திகதிகளில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்பட உள்ளது.

பின்வரும் இடங்களில் வைத்து நாய்களுக்கான தடுப்பூசி குறிப்பிட்ட திகதிகளில் போடப்பட உள்ளதால் நாய் வளர்ப்போர் தவறாது நாய்களைக் கொண்டு, வந்து தடுப்பூசியைப் போட்டுச் செல்லுமாறு காரைநகர்ப் பகுதிக்கான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ். தயாபரன் அறிவித்துள்ளார்.

### 20-09-2000

காலை 10—11 மணி வரை காரைநகர் மேற்கு பிரதேச சபை உப அலுவலகம்.

முற்பகல் 11—12 மணிவரை தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கம்.

நண்பகல் 12 — ஒரு மணி வரை சிவகௌரி சனசமூக நிலையம்.

### 22-09-2000

காலை 10—11 மணிவரை காரைநகர் தென்கிழக்கு J/43 கிராம உத்தியோகத்தர் பணிமனை.

முற்பகல் 11—12 மணிவரை வியாவில் சனசமூக நிலையம்

நண்பகல் 12 — ஒரு மணி வரை திக்கரை கிராம அபிவிருத்திச் சங்கம்.

(ஐ-73)

# செய்திக் கொத்து

## காலாவதியான 'பிஸ்கட்' அழிப்பு

கொடிகாமம் பஸ் நிலையப் பகுதிகளில் உள்ள கடைகளிலிருந்து, காலாவதியான 'பிஸ்கட்' வகைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கைப்பற்றி அழித்துள்ளனர்.

கொடிகாமம் பொதுச் சுகாதார பரிசோதகர்களான என் நிர்மலானந்தன், என். சிவபாலன் ஆகியோர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் பொழுதே இவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

(க-109)

## உணவுக் களஞ்சியம் விஸ்தரிப்பு

கொழும்புத்துறை. செப். 17

யாழ்ப்பாணம் செயலகத்தினால் கோண்டாவிலில் நிறுவப்பட்ட உணவுக்களஞ்சியங்கள் தற்போது விஸ்தரிக்கப்படுகின்றன.

கோண்டாவில் ரயில் நிலையம் அமைந்த பகுதியில் மேலதிக களஞ்சியங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன.

நாவற்குழியில் இயங்கி வந்த பெரிய உணவுக் களஞ்சியம் தற்போதைய இராணுவ அனர்த்தம் காரணமாக இயங்க முடியாதிருப்பது தெரிந்ததே.

(ஐ-30)

## நூற்றாண்டு விழா ஏற்பாடு

கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை இவ் வருட இறுதியில் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவின் ஆரம்ப நிகழ்வாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள வீதித்திருத்த வேலைக்கென ஒரு லட்சம் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெறுவதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(க-117)

## வைத்தியசாலைக் கட்டடம் திறப்பு

தென்மராட்சி, செப். 17

கரவெட்டி அரசினர் வைத்தியசாலையில் சுமார் ஒன்பது லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவுக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது.

வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் விழாவில் மந்திகை ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி கதிரவேற்பிள்ளை பெயர்ப் பலகையையும் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கட்டடத்தையும் திறந்து வைத்தனர்.

கட்டட புனரமைப்புக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினர் எட்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் கரவெட்டிப் பகுதி மக்கள் 30 ஆயிரம் ரூபாவையும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-117)

## உருவப்படம் திரைநீக்கம்

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றி அண்மையில் காலமான கனகரத்தினத்தின் உருவப் படத் திரை நீக்க நிகழ்வு கடந்த மாதம் மேற்படி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் உதவித் திட்டமிடல் பணிப்பாளருமான எஸ். பாலசிங்கம் தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் கனகரத்தினத்தின் பாரியார் உருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

(க-30)

## சித்திரத்தேர் அமைக்கப்படுகிறது

கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு 30 லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வருகிறது.

சித்திரத்தேர்ச் சில்லுகளுக்கான அச்சுகள் கொழும்பிலிருந்து வந்துள்ளதாக தேர்த்திருப்பணிச் சபைச் செயற்குழுத் தலைவர் தெரிவித்தார்.

(க-117)

## அன்னதான மடம் அமைப்பு

கொக்குவில் தாவடி வேம்படி முருகமூர்த்தி கோயிலுக்கென அன்னதான மடம் பலலட்சம் ரூபா செலவில் ஆலய தர்மகர்த்தா சபை மற்றும் திருப்பணிச் சபையினரின் முயற்சியினால் அமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி மக்களின் ஒத்துழைப்பால் இப்பணி துரிதமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

(க-30)

## விளையாட்டு விழா

சுழிபுரம் மேற்கு கலைமகள் பாலர் பாடசாலையின் 29 ஆவது ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை முன்றிலில் சிறப்பாக நடைபெற்றது.

சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத் தலைவர் பா. மதனகோபால் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் நா. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகப் பங்கு பற்றிச் சிறப்பித்தார்.

(ஐ-30)

## வீதிகள் திருத்தம்

மானிப்பாய் கிழக்கு வடலித் தோட்டம் வீதி மற்றும் கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள இரு வீதிகளின் திருத்த வேலைகள் அண்மையில் பூர்த்தியடைந்துள்ளன.

(ஐ-30)

## நியமனக் கடிதங்கள்

கொழும்புத்துறை, செப் 17

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர், சமுர்த்தி வங்கியாளர், சமுர்த்தி யூனியன் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை திங்கட்கிழமை முதல் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் மூலம் உரியவர்களுக்கு சேர்ப்பிக்கப்படும்.

(ஐ-30)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு உண்டு

புதிய நியூஸ்மேட் யமகா(V-50) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.திருக்குமரன் (வீணைவேணு), வழக்கம்பரை வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.(78315)

நல்ல நிலையிலுள்ள R-60 சிசில் குளிர்சாதனப் பெட்டி, மீன் தொட்டி பெரிய அளவிலான கலர் மீன்களுடன், G.Rx-8 SONY 2000w விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- V.A.P தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அருகில், Dr. சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை, சுன்னாகம். (78461)

மெலோடிக்கா, கோழிக்கூடு, கட்டில், எவர்சில்வர் பொருள்கள், என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 59, புது வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (78428)

நல்ல நிலையிலுள்ள 145-5257 இலக்க BAJAH SCOOTER உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: - New Science Hall, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (78475)

## இறைச்சிக் கோழி

சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். (1) 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு) (2) பொன்னாலை வீதி, மானிப்பாய். (விதானை வளவு) (78031)

## இறைச்சிக் கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். இன்று விசேடசேவை. 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78441)

## தேவை

யாழ். பல்கலை வெளிவாரி கலை முதற் தேர்விற்கான விரிவான பாடக்குறிப்புக்கள் வழங்கக்கூடிய பட்டதாரி ஆசிரியர்கள் தேவை. அரசறிவியல், கிறிஸ்தவ நாகரிகம், மொழியியல், நுண்கலை உட்பட. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு: விளம்பரதாரர், த.பெ. இல. 100, யாழ்ப்பாணம். (78479)

## ஆங்கிலம் விசேடமாக

G.A.Q,A/L, O/L Distinction, Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர் B.Sc. (Ceylon), 85, சிவன் கோயிலடி, சிவன்கோயில் பின்புறம், திருநெல்வேலி. (78398)

## O/L ENGLISH MODEL PAPER

மாணவருக்கு நிச்சயம் உதவியாயிருக்கும். யாழ்ப்பாணம் பூபாலசிங்கம், மானிப்பாய் நாயகபாலன் உட்பட எங்கும் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூபா 12/= ஆசிரியர்: K.சோமசுந்தரம், சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (78300)

## தேவை

நல்ல நிலையிலுள்ள பாவனைக்கு பயன்படத்தக்க Computer, Printer, Scanner, UPS என்பன உடனடியாகத் தேவை. கைவசம் உள்ளோர் விற்பனைக்கு இருப்பின் உடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: விளம்பர தாரர் த.பெ இல. 100, யாழ்ப்பாணம். (78478)

உங்களிடம் தரமான கோட், சூட் விற்பனைக்காக இருப்பின் நாங்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்வோம். தொடர்புக்கு: பஸ் நிலையம் முன்பாக, 163 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (78473)

## நாய்க்குட்டிகள் விற்பனை

Dobermann Pincher நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), (முத்திரைச் சந்தையடி, நல்லூர். (78448)

## தவறிவிட்டது

யாழ்.கடற்கரை வீதி கட்டடத் திணைக்களப் பொறியியலாளரினால் 10.09.2000 திகதியிடப்பட்டு கோப்பாய் பிரதேசசெயலருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் பெரிய என்வலப்புடன் 13.09.2000 அன்று இராசாவின்தோட்ட வீதி - ஸ்ரான்லி வீதி - ஆஸ்பத்திரி வீதி - வேம்படி வீதி - கஸ்தூரியார் வீதிகளுக்கிடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நாவலர் மண்டபத்தில் இயங்கும் மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் ஒப்படைத்துதவவும். (78432)

## இலக்கியக் கட்டுரைகள்

"நிலமென்னும் நல்லாள்" நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல் இலக்கியக்கட்டுரைகள். க.பொ.த. மாணவர்கள் தமிழ் மொழியும் இலக்கியமும் கற்க உதவக் கூடிய 38 கட்டுரைகள். (78468)

## தவறிவிட்டன

குரும்பசிட்டி, தெல்லிப்பழையைச் சேர்ந்த இராசநாயகம் ஜெயசிறி எனும் பெயர் கொண்ட தேசிய அ.அ.(இல.677802316v), விக்கினேஸவரன் ஜெயசிறி எனும் பெயர் கொண்ட விஷேட அ.அ. என்பன 12-09-2000 அன்று மானிப்பாயில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து க.விக்கினேஸ்வரன், C/O கண்ணன், மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். எனும் முகவரியில் அல்லது துர்க்கா மில், மானிப்பாய் மேற்கு எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78445)

## தவறிவிட்டன

இல. 29, அரசடி வீதி, 5 ஆம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த சின்னத்துரை சாந்தநாயகி எனும் பெயர் கொண்ட தேசிய அ. அ. (இல.677553316v), பத்மநாதன் சாந்தநாயகி எனும் பெயர் கொண்ட விசேட அ.அ. மற்றும் மேற்படி முகவரி கொண்ட கந்தையா லெட்சுமி என்பவரது விசேட அ.அ. (இல.0902017093) என்பன நல்லூர் தீர்த்த உற்சவத்தின் போது ஆலயச் சூழலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (78486)

## விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய சோக்கேஸ், வீறாக்கி என்பன விற்பனைக்கு உண்டு

தொடர்பு:
**லக்ஷிகா அழகு மாடம்**
ஆடிய பாதம் வீதி,
கல்வியங்காடு. (78483

---

உ

# வெள்ளவத்தையில்

*மிலேனியம் ஆண்டில் மிகையான சூழலில்*
*மிகைப்படுத்தப்பட்ட அழகு மிளிர் குடிமனையில்*
*குடிபுக உடன் தயார் நிலையில்*

# ஐடியல் கோட்

46- IBC றோட், வெள்ளவத்தை.

குடிபுகத் தூண்டும் வசதிகள்

- மூன்று அறைகளில் கூடிய வீட்டுத் தொகுதி
- இரண்டு அறைகளில் கூடிய வீட்டுத் தொகுதி
- முதலாம் இரண்டாம் மாடிகள் குளிரூட்டப்பட்ட வசதி
- வாகனத் தரிப்பிட வசதி
- சுடுநீர் வசதிகளுடன் கூடிய முதன்மைக் குளியலறை.
- ஒவ்வோர் அறைகளுக்கும் வெளிநாட்டு செரமிக் தரை
- குளியலறை, மலகூடம் 6' உயரத்திற்கு மாபிள் பதிக்கப்பட்டது
- தன்னியக்க லிப்ட் (Lift) வசதிகள்
- தொலைபேசி வசதிகள்
- மின் இணைப்பு தடைப்படும் போது தன்னியக்க மின்பிறப்பாக்கி
- பணியாளர்களுக்கான பிரத்தியேக குளியலறை

மேலும் உங்களை குடிபுகத் தூண்டும் பல வசதிகள் உள.

அபிவிருத்தி

யூபிலன்ட் (பிறைவேற்) லிமிட்டட்
23/7, ஸ்கோபில்ட் பிளேஸ்,
கொழும்பு - 03.
☎ 594962, 584487, 584346.
Fax - 508894

மருதம்
நெ.ம.ம.வீ.வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
☎ 070-212229, 070-212329
Fax - 070-212371

(78465)

---

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் நவரத்தினம் ரவீந்திரகுமார்

15.09.2000 வெள்ளிக்கிழமை எமதுயிர் நண்பன் இறைபதமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். சொல்லொணாத் துன்பமும் ஈடு செய்யமுடியாத இழப்பும் எய்தியுள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

- நல்லூர் நண்பர்கள்

(78472)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலராக 24 - 09 - 1989



சருகாக 30 - 08 - 1999

## செல்வி கிருஷாளினி தர்மகுலசிங்கம்

(நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை - 5 ஆம் ஆண்டு மாணவி)

பாடித்திரிந்த குயில்
பாதியிலே பறந்தாலும்
மீதிப் பொழுதுகளும்
உந்தன் நினைவுகளில் தான் கரையும்

கொஞ்சும் மொழிச் சிரிப்பும்
கோல மயில் அழகும்
இதயத்தில் நிரப்பி என்றும்
இளமையையே பரப்பி நிற்கும்

உன் பிரிவைத் தாங்காது தவிக்கும்
அப்பா, அம்மா, அண்ணாமார்,
அப்பம்மா, உறவினர்கள் ,
நண்பர்கள், நண்பிகள்.

அல்வாய்
(78460)

---

எமது உள்ளத்து அறையில் அமர்ந்திருக்கும்
அன்புத் தெய்வத்தின்

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

வையக ஏட்டில் 1963 - 12 - 14



தெய்வ வீட்டில் 2000 - 08 - 04

## அமரர் சரவணை ஜெயராசா

அன்பாய் அரவணைத்து ஆதரவாய்க் கண்டித்து
அடக்கமாய் எமை வளர்த்த - எம
ஆருயிர் தெய்வமே!
ஒரு தந்தைக்குரிய அத்தனை பொறுப்புக்களையும்
சற்றேனும் தவறாமல் நிறைவேற்றி
சமுதாயத்தில் எமைத் தலைநிமிர்ந்து - வாழ
வழி சமைத்து விட்டு நிறைவான மனத்தோடு
இறைவனடி சேர்ந்து விட்டீர்கள்.
ஐயா விபத்தென்று நாம் இருந்தோம்
விபரீதமாய் போனதையா!
கட்டப்பிராய் தனில் வானவூர்தி வடிவெடுத்து
வந்தானே இயமனவன் - உனது உயிரைக் குடிக்க
பாதியில் குழி பறிந்ததுவோ!

**உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

இன்று (17-09-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மனைவி - **சறோஜா**
பிள்ளைகள் - **ஜெனாத்ஜெசிந், ஜெனுஜா,**
**மற்றும் உற்றார், உறவினர்.**

நிரந்தர முகவரி:
*புதிய செம்மணி வீதி,*
*ஞானபைரவர் கோவிலடி,*
*கல்வியங்காடு.*

தற்போதைய முகவரி:
*மாதிரிக் குடியேற்றம்,*
*சுன்னாகம், தெற்கு*
*சுன்னாகம்.*

(78435)

# ஐ.தே.கட்சி - புலிகள் ஒப்பந்தமே கொழும்புக் குண்டுத் தாக்குதல்

## பொ. ஐ. முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 17 ஐக்கிய தேசியக் கட்சிக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஒரு கட்டமே கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஆகும்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஊடக ஒருங்கிணைப்புப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர்களைக் கொலை செய்வதன் மூலம் ஐ. தே. கவை எப்படியாவது ஆட்சியில் அமர்த்துவதே புலிகளின் நோக்கம் ஆகும்.

இந்த வகையில் சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவைக் கொலை செய்ய எடுத்த முயற்சியே இது. அம்பாறையில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் செழியன், அம்பாறை தமிழ்ப் பிரிவு அமைப்பாளர் மனோகரன் பிள்ளை ஆகியோர் கொலை செய்யப்பட்டதும் இவர்களின் செயலே.

எனவே புலிகளின் அச்சுறுத்தலையும் ஐ.தே.கவின் சதி முயற்சியையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பொது மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர்களுடன் அணி சேர்ந்து முறியடிக்க வேண்டியது பொது மக்களாகிய எமது கடமை.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-9-4)

# சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கி கொடுப்பனவு குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப் 17 சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு உள்ள பளைப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கான 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் யாழ். மானிப்பாய் வீதியில் இயங்கும் பளைப் பிரதேச செயலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றன.

கொடுப்பனவுக்கான காசோலைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக மானிப்பாய் வீதியில் உள்ள அலுவலகத்தில் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பளைப் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

(இ-9)

# கணனிப்பயிற்சிநெறிக்குதெரிவான அரச அலுவலர்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 17 ... க்கு—... முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் அரச அலுவலர்களுக்கு நடத்தப்படும் கணனிப் பயிற்சி நெறியின் மூன்றாம் தொகுதியினருக்கான பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஒக்ரோபர் 6 ஆம் திகதி வரை யாழ்ப்பாண பலாலி வீதியில் இயங்கும் டி. சி. எஸ் கணனிப் பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறிக்கு தெரிவானவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பயிற்சி நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட 20 பேரின் பெயர் விவரம் வருமாறு:-

கே பாலகிருஷ்ணபிள்ளை (பிரதேச செயலகம், பளை), வி. வெண்ணிலா (பிரதேச செயலகம், கோப்பாய்), வி. இராமநாதன் (பிரதேச செயலகம், நல்லூர்), எஸ். அலோசியஸ் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), வி. இந்துமதி (கல்வி வலயம், வடமராட்சி), ஏ ஜெயந்திமாலா (கல்வி வலயம் மருதனார்மடம்), எஸ். கிருபாகரன் (கல்வி வலயம், சாவகச்சேரி), எஸ். ஸ்ரீகுமார் கல்வி வலயம், யாழ்ப்பாணம்), பி. வாமினி (பிரதேச சபை, வலி. வடக்கு), பி. சிவலிங்கம் (பிரதேச சபை. நல்லூர்) எஸ். சிவராஜசிங்கம் (பிரதேச சபை, வலி. மேற்கு), எஸ். எஸ். பிரபாகரன் (பிரதேச சபை, வலி. தென்மேற்கு), பி. வெஸ்லி (பிரதேச சபை, வேலணை), ஆர். சுதர்சினி (பிரதேச சபை, வலி. கிழக்கு), ரி. மாணிக்கவாசகர் (பிரதேச சபை, பருத்தித்துறை), கே. யோகேஸ்வரி (பிரதேச சபை, சாவகச்சேரி),

எஸ். பூபாலபிள்ளை (நகர சபை, பருத்தித்துறை), எஸ். சர்மிளா நகரசபை, வல்வெட்டித்துறை), ஆர். ஜெயபரிபாலன் (வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்), எஸ். பரமேஸ்வரி (உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்),

(இ-க)

# விக்கினேஸ்வரா வித்தியாலய வகுப்புகள்

அச்சுவேலி, செப். 17 வாதரவத்தை விக்கினேஸ்வரா வித்தியாலயம் பிற்பகல் வேளையில் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் செயற்படுகின்றது.

தென்மராட்சி இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் இணைந்து செயற்பட்டு வந்த விக்கினேஸ்வரா வித்தியாலயம் மாணவர்களின் வசதியைக் கருத்தில் கொண்டுபிற்பகலில் செயற்படுவதாக அதிபர் சி. சிவலிங்கராசா தெரிவித்தார்.

(இ-11)

# இன்று நடப்பவை

யாழ்ப்பாணம், செப். 17 தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிந்து அண்மையில் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்று சேவையாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கான ஆசிரியர்பயிற்சி தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கருகில் உள்ள டி. எம். ஐ. கல்வி நிலையத்தில் நடைபெறும்.

ஆசிரியர்கள் தமது நியமனக் கடிதத்தின் பிரதியுடன் சமுகமளிக்குமாறு யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

(க)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 17 இலக்கண வித்தகர், மகாவித்துவான் வித்துவ சிரோமணி இ. நமசிவாய தேசிகரின் மறைவையொட்டிய அஞ்சலிக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள சம்பன் கோட்டத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப். 17 விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் கலைவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறும்


(க)

★ ★ ★

அரியாலை, செப். 17 திருநெல்வேலி சாயி சமித்தியில் உலகளாவிய இரத்த தான தினத்தை முன்னிட்டு இரத்ததானம் வழங்கும் வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

(க-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் கந்தையா இரத்தினசிங்கம்

தோற்றம் 1942-06-20 — மறைவு 2000-08-19

''பாசத்தோடு எமை அரவணைத்து
நல்வழி காட்டிய எம் அப்பாவே!
மாதம் ஒன்று ஆனபின்பும்
ஆறவில்லை உங்கள் நினைவலைகள்.''

எமது தந்தையின் பிரிவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு நாடி ஓடி வந்து பல்வேறு வழியிலும் உதவி புரிந்து இறுதிக் கிரியையில் கலந்து கொண்ட அனைத்து அன்பு இதயங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (2000—09—18) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்

No. 133, அரச வீதி,
நல்லூர். (78462)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 1929 — 08 — 17



ஆண்டவன் அணைப்பில் 1999 — 09 — 20

திருமதி

## பவளம் குணமணி

(இளைப்பாறிய ஆசிரியை—நாயன்மார்கட்டு, நல்லூர்)

மாதங்கள் பன்னிரண்டு மாயமாய்
மறைந்து ஆண்டு ஒன்று ஆனதே!
உங்கள் அன்பும் பரிவும் பாசமும்
ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம் நெஞ்சம்;
அகலாது உங்கள் நினைவு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நீங்காத நினைவுகளோடு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கணவன், பேரமக்கள்.
உற்றார், உறவினர்.

15, இராமநாதன் வீதி,
நல்லூர். (78436)


# கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி! ஹோட்டல் சீவம்ஸ்

தலைநகரில் கடந்த 15 ஆண்டுகளாக உங்களுக்குச் சிறந்த சேவை செய்து வரும் ஒரே ஸ்தாபனம் ஹோட்டல் சீவம்ஸ், இன்றே விஜயம் செய்யுங்கள்.

கொழும்பில் தங்குவதற்கு ஏற்ற மிகச் சிறந்த சுற்றாடலுடன் நல்ல காற்றோட்டம் உள்ள தனி அறைகளும் இரண்டு பேர் தங்குவதற்கு ஏற்ற அறைகளும் சிற்றுண்டிச்சாலையுடன் அமைந்த ஒரே இடம். இன்றே விஜயம் செய்யுங்கள்:

HOTEL SEIVAMS (GUEST HOUSE)

(78476) No. 29A, Sangamitha Mawatha, Kotahena Colombo - 13. T. P. No. 356522

# சிறந்த வைத்திய சேவையை தொடர பொதுமக்களின் ஒத்துழைப்புதேவை

## யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப், 17

''யாழ்.போதனாவைத்தியசாலையில் சிறந்த வைத்திய சேவையைத் தொடரவும், வைத்தியசாலையின் புனிதத்துவத்தைப் பேணவும் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.''

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. அவையாவன:

★ நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் நோயாளர்கள் தவிர்ந்த ஏனையோர் வைத்தியசாலைக்குள் வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ சிகிச்சை பெற வருபவர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் அமைதியாக இருந்து சிகிச்சைபெற்று மருந்து வகைகளைப் பெற்றுக் கொண்டதும் உடனடியாக வைத்தியசாலையை விட்டு வெளியேறுதல் வேண்டும்.

★ வைத்தியசாலையில் கடமையாற்றும் பணியாளர்களைச் சந்தித்து முன்னுரிமைச் சலுகைகளைப் பெறுதலைத் தவிர்த்தல் வேண்டும்.

★ இளைஞர்கள், யுவதிகள் சிகிச்சை பெறுவதற்கென வந்து வைத்தியசாலையில் உள்ள ஒதுக்குப் புறங்களில் கதைத்துக் கொண்டிருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ நோயாளிகள் தொகையாகப் பணத்தைக் கொண்டு வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ ஆபரணங்களை அளவுக்கதிகமாக அணிந்து வருவதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ இளைஞர்கள், யுவதிகள் நோயாளர்களைப் பராமரிக்க அமர்த்துவதைக் கூடியளவில் தவிர்த்தல் வேண்டும்.

★ பணியாளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

★ பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய ஒத்துழைத்தல் வேண்டும்.

★ கூடிய வரையில் நோயாளர்களைப் பார்வையிடவென ஒதுக்கப்பட்ட நேரத்துக்குப் பின் வைத்தியசாலையை விட்டு வெளியேறுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்

### நோயாளர்களுக்கு வேண்டுகோள்

யாழ் போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு, விசேட சிகிச்சை நிலையங்கள் போன்றவற்றில் சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் மற்றும் அவர்களுக்கு உதவியாக வரும் உறவினர்கள், நண்பர்கள் போன்றோரும், உள்ளக நோயாளிகளாக விடுதிகளில் அனுமதிக்கப்படும் நோயாளிகள், அவர்களுக்கு உதவி புரிய நிற்பவர்கள்சிலரும் பலவிதமான- தேவையற்ற—அநாகரிகமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், களவு செய்தல், மது அருந்துதல் போன்ற வைத்தியசாலைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முறையில் செயற்படுவதாக அண்மைக்காலங்களில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனவே வைத்தியசாலையின் புனிதத்துவத்தைப் பேணும் முகமாகவும் சிறந்த வைத்திய சேவையைத் தொடரும் முகமாகவும் மேற் கூறப்பட்ட நடைமுறைகள் பேணப்பட வேண்டும்.

இது உங்கள் வைத்தியசாலை. இதன் நற்பெயரையும், சேவையையும் பேணுவது உங்கள் சகலரினதும் பொறுப்பாகும் —

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-க-139)

# மானிப்பாய் வாசிக்கு அதிர்ஷ்டம்

இலங்கை வங்கியின் தலைமைப் பீடத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட ''பொற்கணக்கு'' அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் மானிப்பாய் இலங்கை வங்கி கிளையின் வாடிக்கையாளரான மானிப்பாய் வாசி ஒருவருக்கு முதலாம் பரிசாக புத்தம் புதிய மோட்டார்கார் ஒன்று கிடைத்துள்ளது. இரண்டாவது பரிசான ஓட்டோ இதே வங்கி கிளை வாடிக்கையாளரான பண்டத்தரிப்பு வாசிக்கு கிடைத்துள்ளது.

இதேவேளை இந்தக் கிளைவாடிக்கையாளர்களான 11 பேருக்கு அவர்களின் வங்கிக் கணக்கில் நிலுவையிலுள்ள பணத்துக்கு சமமான அளவு பணம் வழங்குவது என்ற ஆறுதல் பரிசில்களும் கிடைத்துள்ளன. இரண்டு பேருக்கு காஸ் குக்கர்களும் பரிசாக கிடைத்துள்ளன என்று வங்கி கிளை முகாமையாளர் தெரிவித்தார்

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

கொடிகாமம் சந்தைப் பகுதிகளிலும் அதன் அயற் பகுதியிலுமுள்ள கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி காலை நஞ்சூட்டி அழிக்கப் படவிருக்கின்றன.

எனவே இப்பகுதியில் உள்ள வளர்ப்பு நாய்களை அன்றைய தினம் கட்டி வைக்குமாறு கொடிகாமம் பொதுச்சுகாதார பரிசோதகர் என். நிர்மலானந்தன் கேட்டுள்ளார். (க-109)

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், செப். 17

கொக்குவில், மானிப்பாய், கோவில்பற்று, சாவகச்சேரி லயன்ஸ்கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறும்.

இந்த முகாமில் கண், பல், பொதுமருத்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

கண் பரிசோதனையை லயன் ஜே. எஸ். ஏ. பெர்னாண்டோவும் பொது மருத்துவப் பரிசோதனையை பிரபல வைத்திய நிபுணர்களும் கண்பரிசோதனையை டாக்டர் எஸ். ரவீந்திரனும் மேற்கொள்வர்.

40 வயதுக்கு மேற்பட்ட நூறு பேருக்கு மட்டும் கண் பரிசோதனை மேற்கொள்ளப்படும். (க)

★ ★ ★

வலி. கிழக்கு செப். 17

நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இரத்த அழுத்தம், சிறுநீரகப் பரிசோதனை, கண்பரிசோதனை போன்ற பரிசோதனைகள் நடத்தப்பட்டு ஆலோசனைகளும், மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

கண்பரிசோதனையின் போது கண்ணாடி வழங்க சிபார்சு செய்யப்படுவோருக்கு விரைவில் கண்ணாடி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது (க-180)

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளை சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 17

கடந்தமாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ (உயர்தரப்) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக யாழ். கல்வி வலயத்தில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் தொடர்பான ஒப்படைகள், ஆய்வுக்கட்டுரைகள், அறிமுறைசார் பரீட்சைகள், செயன்முறைசார் பரீட்சைகள் மற்றும் தனிநபர் செயல்திட்ட அறிக்கை பற்றிய விடயங்கள் தொடர்பாகவே இந்த அறிவுறுத்தல் கூட்டம் நடைபெறுகிறது.

கீழ்க்காணும் பெயர் விபரங்கள் தரப்பட்ட பரீட்சார்த்திகளை கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மாலிங்கம் தெரிவித்துள்ளார்.

சுமித்திரா சொக்கலிங்கம் (அரியாலை) பாலகுருஸ்வாமி சிவதீபன் (நல்லூர்) செல்வநாதன் சிவானந்தன் (நல்லூர்) இராசையா பாலமுரளி (பாற்பண்ணை வீதி, துணுக்காய்) செல்வராஜா கேசவன் (நல்லூர்) நந்தகுமார் காண்டீபன் (ஆனைக்கோட்டை) பாலசுப்பிரமணியம் ரமேஸ்குமார் (திருநெல்வேலி).

ஜெயவிக்கிரமன் ஜெயதாஸ் (யாழ்ப்பாணம்), சண்முகநாதன் ஜெயந்தன் (யாழ்ப்பாணம்), சசீந்திரா சிவராஜா (பாற்பண்ணை வீதி, திருநெல்வேலி), அ. கவிதா (நல்லூர்), சரவணமுத்து சுகிர்தராஜ் (ஆனைக்கோட்டை), கவிதா சச்சிதானந்தசிவம் (கோண்டாவில் கிழக்கு), சபாலக்மி குணநாயகம் (திருநெல்வேலி தெற்கு).

அமுதசுரபி ஸ்ரீஸ்கந்தா (ஆனைப்பந்தி), திபாகினி தேவேந்திரன் (கோண்டாவில் மேற்கு), மேனகா அருளம்பலநாயகம் (ஆனைப்பந்தி), சத்தியவாணி கேதீஸ்வரதாசன் (அரியாலை), சுபாஜினி கிறிஸ்தோபர் (யாழ்ப்பாணம்), காமினி யோகராஜா (யாழ்ப்பாணம்).

இவர்களுக்கான தனிப்பட்ட கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10-ரி)

# அச்சுவேலி மக்கள் வங்கிக்கிளை நாளை திறந்து வைக்கப்படும்

அச்சுவேலி, செப். 17

அச்சுவேலியில் மக்கள் வங்கியின் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

அச்சுவேலிப் பொதுச் சந்தைக் கட்டடத்தில் மக்கள் வங்கியின் கிளை நாளை காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

ஆரம்பத்தில் சேமிப்புக் கணக்குத் தொடர்பான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் காலக்கிரமத்தில் ஏனைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் — அச்சுவேலி மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் தெரிவித்தார்.

(இ-11)

# ஆங்கில தினப் போட்டி

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் நாளை 18 ஆம் திகதியும் 19 ஆம் திகதியும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. மாலிங்கம் தெரிவித்துள்ளார். (இ-10-ரி)

# பண்டத்தரிப்புஇந்துக்கல்லூரிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம்

யாழ்ப்பாணம், செப். 17

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு இரண்டு லட்சத்து 50, ஆயிரம் ரூபா செலவில் புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் சண்முக சுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

ஷெல் தாக்குதல்களுக்கு இலக்காகி பாடசாலை வகுப்பறைகள் நீண்டகாலமாக சேதமடைந்திருந்ததைத் தொடர்ந்து, ஈ.பி.டி.பி. கட்சி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியால் அடுத்தே வடமாகாண புனர்வாழ்வு மீள்குடியேற்ற அதிகார சபை நிதியில் இருந்து புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கான நிதி ஒதுக்கப்பட்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் வே. அன்ரன் ஜோன்சன், வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வலி .மேற்கு பிரதேச சபை செயலாளர் மா. புவேந்திரன் உட்பட பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ-9-5)

# ஒரு தொகுதி அ. அட்டைகள் கிடைத்தன

பளைப் பிரதேச செயலர் பிரிவில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களின் ஒருதொகுதி அ. அட்டைகள் பிரதேச செயலகத்துக்குக் கிடைத்துள்ளன.

இவை அந்தந்தக் கிராம அலுவலர்கள் ஊடாக உரியவர்களுக்கு, வழங்கப்படவுள்ளதாகவும், தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க-117)

# சிலை திறப்பு விழா

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை ஸ்தாபகர் சேர் காடினர் சிற்றம்பலத்தின் சிலை வைத்தியசாலை வளவில் நிறுவப்பட்டுள்ளது.

சிலை உருவாக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்டிருப்பதால் மிக விரைவில் திறந்து வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

(இ-11)

## புலிகள்ஊடுருவியுள்ளனர் என்றசந்தேகம்

# வடமத்திய,மத்தியமாகாணங்களில் கடும் தேடுதல் நடவடிக்கை

கொழும்பு, செப். 1

வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவி இருப்பதாகக் கூறி இப் பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக படையினரும், பொலிஸாரும் கூட்டாக தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பகுதிகளில் இருபதுக்கும் மேற்பட்ட தற்கொலைக் குண்டுதாரிகள் ஊடுருவி இருப்பதாகவும் அவர்கள் இப் பகுதிகளில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் மிக முக்கிய அரசியல் வாதிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தக் கூடுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது

இதனை அடுத்து இந்த இரு மாகாணங்களிலாதும் முக்கிய நகரங்களிலும் — தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும் பகுதிகளிலும் தினமும் தேடுதல் நடவடிக்கைகளில் படையினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர் இத் தேடுதல் நடவடிக்கையின்போது கண்டி, அனுராதபுரம். நுவரெலியா உட்படப் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெருமளவு தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், டாக்டர்களும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(க-4)

# கோயிலடியில் சைக்கிள்கள் களவு

யாழ்ப்பாணம், செப். 17

யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள நாச்சிமார் கோயிலடியில் நேற்று முன்தினம் காலை இரு சைக்கிள்கள் களவாடப்பட்டன.

கோயிலுக்கு கும்பிட வருவோரிடமிருந்தே சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

பக்தர்கள் அதிகமாகக் கூடும் வெள்ளிக்கிழமைகளில் இந்தக் கோயில் சுற்றாடலில் சைக்கிள் களவுகள் அடிக்கடி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(இ)

# சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயப் பெருவிழா

# யூபிலி ஆண்டின் சிறப்புப் பெற்ற திருவிழா

## பலன்களைத் தரும் யாத்திரைத் தலமாக யாழ்.ஆயர் பிரகடனம் செய்துள்ளார்

நூற்றாண்டு காலப் பழைமை வாய்ந்த சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலத்தின் வருடாந்தப் பெருவிழா இம்மாதம் 15ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இது 2000ஆம் யூபிலி ஆண்டுக்குரிய விழாவாக இருப்பது ஒரு புறமிருக்க, யூபிலி ஆண்டுப் பலன்களைப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சிறப்பு யாத்திரைத்தல பெருவிழா என்கின்ற வகையில் இந்த ஆண்டுப் பெருவிழா முதன்மையும் முக்கியத்துவமும் பெறுகின்றது.

சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலப் பெருவிழா யாழ்.மறைமாவட்ட யூபிலி ஆண்டின் சிறப்பு நிகழ்வாக அமைகின்ற வேளையில் யாழ். மறைமாவட்டத்தில் தீவுப் பகுதி கத்தோலிக்க மண்ணின் நிலையையும் சாட்டி அன்னையின் ஆலய வரலாற்றினையும் திருவிழாவின் போது நடக்கவிருக்கின்ற சிறப்பு நிகழ்வுகளையும் இக்கட்டுரையில் ஆராய விரும்புகிறேன்.

### விசேட பலன்

யூபிலி ஆண்டில் விசேட பலன் பெறும் இடம் சாட்டி.

யாழ்.மறை மாவட்டத்தில் 2000ஆம் யூபிலி ஆண்டின் பரிபூரண பலன்களைப் பெற 15 யாத்திரைத் தலங்களை யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த ஆண்டின் இறுதியில் அறிவித்தார். அவற்றுள் மிகவும் பிரசித்தி பெற்றதாக சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலம் விளங்குகின்றது. யூபிலியின் பலன்களைப் பெறுகின்ற யாத்திரைத் தலமாக சாட்டி பிரகடனப்படுத்தப்பட்டபடியால் வழமையான வருடாந்த திருவிழாவோடு வேறு பல திருவிழாக்களையும் இணைத்து பக்தர்கள் அன்னையின் அருளையும் ஆசிரையும் பெறத் திட்டமிடப்பட்டது.

ஆனால், சாட்டியில் ஒன்றுக்கு மேற்பட்ட விழாக்களை பக்தர்கள் நலன்கருதி கொண்டாட போடப்பட்ட திட்டமும் இந்த ஆண்டு யூபிலி ஆண்டுக்கான சிறப்புச் செயற்பாடுகள் பலவும் இடம்பெயர்வினாலும், யுத்த அழுத்தங்களினாலும் தடைப்பட்டது. இருப்பினும் சாட்டி அன்னையினுடைய வருடாந்த திருவிழாவை சிறப்பான விதமாகக் கொண்டாடவும், பக்தர்கள் யூபிலி ஆண்டின் பரிபூரண பலன்களைப் பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஒரு பரிபூரண பலன் என்பது, தான் செய்த தவறுகளுக்கு மன்னிப்புப் பெற்ற ஒருவர் தம் குற்றங்களால் தாமே தேடிக்கொண்ட இவ்வுலகத் தண்டனையை இறைவன் முன்னிலையில் நீக்கிவிட வழிசெய்யும் ஒரு நற்சாதனமாகும்.

யூபிலி ஆண்டிலே இப்பலனைப் பெறுவதற்கு திருயாத்திரைகளை மேற்கொள்ளும் வழக்கம் திருச்சபையில் உண்டு. அந்த வழக்கத்தின்படியே இந்தப் பலனைப் பெற்றுக் கொள்ள 2000ஆம் யூபிலி ஆண்டின் பரிபூரண பலன் பெறும் தலமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட சாட்டி மாதா யாத்திரைத் தலத்துக்கு, யாத்திரை மேற்கொள்ள பக்தர்கள் அழைக்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் கிறிஸ்தவத்தின் ஒரு விளைநிலமாகவும், வளநிலமாகவும் தீவுப்பகுதி விளங்குகின்றது. 05 பங்குகளையும், 34 ஆலயங்களையும் கொண்டுள்ள இப்பிரதேசம் கத்தோலிக்க விசுவாசத்தில் ஊன்றிவளர்ந்த ஓர் இடமாகும். யாழ்.மறைமாவட்டத்திற் குரிய மிகவும் பிரசித்திபெற்ற 03 முக்கிய யாத்திரைத் தலங்கள் தீவுப் பகுதியில் அமைந்திருப்பது இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். வேலணை சாட்டி மாதா யாத்திரைத்தலம், சரவணை சின்ன மடு மாதா யாத்திரைத் தலம், கரம்பன் வேளாங்கன்னி அன்னை யாத்திரைத் தலம் ஆகிய மூன்று யாத்திரைத் தலங்களும் யாழ்.மறைமாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்களை இங்கு குழுமிவர வருடா வருடம அழைத்து வருகின்றன. இந்த மூன்று யாத்திரைத் தலங்களும் தேவமாதாவுக்குரிய யாத்திரைத்தலங்களாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஞாயிறு நற்பிரசாதம்

கானகத்தில் வாழும் மருதமடு அன்னையின் இயற்கை அழகு கொண்ட யாத்திரைத் தலம், 1981ஆம் ஆண்டு மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்டபோது மன்னார் மறைமாவட்டத்துக்குரிய பகுதியாக பிரிந்துபோன பின்னர், யாழ். மறைமாவட்டத்துக்கென "மடுவைப்போல" ஒரு யாத்திரைத் தலத்தை உருவாக்கி வளர்க்க வேண்டும் என்ற எண்ணமும் ஏக்கமும் பலர் மனதுகளில் உருவாகின. நீண்ட கால சரித்திரப் பின்னணியும், மக்கள் மத்தியில் பிரசித்தியும், இயற்கை அழகும் இட அமைப்பும், கடல் வளமும் கொண்ட சாட்டி சிந்தாத்திரை மாதா ஆலயத்தை யாழ். மறைமாவட்டத்தின் மடுவைப் போல தலைசிறந்த யாத்திரைத்தலமாக மாற்றி அமைக்க வேண்டும் என்ற விருப்பமும் வேண்டுதலும் நாட்டு நிலைமைகளாலும், குழப்பங்களாலும் இன்று வரை கைகூடாமலே போயுள்ளது.

லைடன் தீவின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகிய வேலணையின் வடகீழ்த் திசையிலுள்ள சிற்றூராகிய சாட்டியில் "சாட்டி மாதா", என்று மக்களால் அன்பாக அழைக்கப்படும் பிரசித்திபெற்ற சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாணத்திலே அழகும் அமைதியும் கொண்ட கடற்கரைகளில் ஒன்றாக சாட்டி கடற்கரை விளங்குகின்றது. கத்தோலிக்க மக்கள் மட்டுமன்றி இந்து சமய மக்கள் கூட தமது இனிமையான பொழுதுகளைக் கழிப்பதற்காக இச் சாட்டி கடற்கரைக்கு வந்துபோவது நீண்ட கால வழக்கம். அந்நேரங்களிலெல்லாம் அவர்கள் சாட்டி அன்னையிடம் அருள்வேண்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலத்துக்குப் போகாமல் சாட்டி மண்ணைவிட்டு வெளியேறுவதில்லை. கத்தோலிக்கர்கள் திருநாள் காலங்களில் மட்டுமல்ல, வருடம் முழுவதிலும் யாத்திரைகளையும், கருத்தரங்குகளையும் ஒன்றுகூடல்களையும், உல்லாசப் பயணங்களையும் ஒழுங்கு செய்து இங்கு வந்து செல்வர்.

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது, சாட்டியில் ஒரு கோட்டையைக் கட்டி, தம் கடற்பயணத்தின் போது தம்மைப் பாதுகாத்து வந்த இந்த சிந்தாத்திரை மாதா சுருபத்தை தம் பிரார்த்தனை அறையில் வைத்து வேண்டுதல் செய்து வந்தனர்.

ஒல்லாந்தர் கைகளுக்கு யாழ்ப்பாணம் மாறியபோது சாட்டியில் இருந்த இக்கோட்டை அவர்களால் தகர்த்தெறியப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களின் பின்னர் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்ட மேற்படி கோட்டையின் இடி பாடுகளுக்கிடையில் இந்த சிந்தாத்திரை மாதா சுருபம் புதுமையாக சிதைவுறாமல் கண்டெடுக்கப்பட்டது. ஊர்மக்கள் அந்த சிந்தாத்திரை மாதா சுருபத்தை ஓர் ஓலைக் கொட்டில் கட்டி அதில் பக்தியாக வைத்து வேண்டுதல் செய்து வந்தனர்.

அவர்களோடு வாழ்ந்த 'மூத்தவி' என்ற உத்தம கத்தோலிக்கர் ஓர் உயர்ந்த தடிக் கம்பத்தை நிறுவி அதன் நுனியிலே மணியொன்றைக் கட்டி அம் மணியினை அடித்து மக்களை ஆலயத்துக்கு அழைத்து வழிபாடுகள் செய்து வருவது வழக்கமாயிருந்தது. ஒவ்வொரு வருடமும் சாட்டியிலே அமைந்துள்ள இக் கொட்டில் கோயிலுக்கு அவர் ஊர் மக்கள் எல்லோரையும் அழைத்து 03 நாள்கள் அங்கு தங்கி வழிபாடு நடத்தி வந்தார் என அறிய வருகிறது.

சாட்டி சிந்தாத்திரை மாதாவின் மேல் ஆழ்ந்த பக்தியும் நம்பிக்கையும் கொண்ட மக்கள் இந்த வருடாந்த வழிபாடுகளில் பங்குபற்றி அன்னையின் அருளை நிறைவாகப் பெற்று வளம் பெற்று வாழத்தொடங்கிய போது, இவ்வாலயத்தை சிறப்பான ஓர் ஆலயமாக அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே உருவானது. அந்த எண்ணக்கருவுக்கு உருக்கொடுக்கும் வகையில் 1789ஆம் ஆண்டு சிறிய ஓர் ஆலயத்தைக் கல்லினால் அங்கு கட்டி அமைத்தார்கள்.

இந்த ஆலயம் 1886இல் தீப்பற்றி எரிந்துபோனதாக அறியவருகிறது. இதன் பின்னர் 1928ஆம் ஆண்டு இந்தஆலயத்துக்குப பொறுப்பாயிருந்த அந்தோனி அடிகளாரின் காலத்தில் இப்போது நாம் காணுகின்ற ஆலயக் கட்டட வேலைகள் ஆரம்பமாகின. அன்னையின் அருள்பெற்ற பக்தர்கள் அனைவரும் தம்மால் இயன்ற அன்புக் காணிக்கைகளை மனமுவந்து அள்ளி வழங்கிய போது ஆலயம் அழகுற முழுமைபெறத் தொடங்கியது.

1946இல் ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த திரு எஸ்.எம். பஸ்ரியன் என்பவருடைய மனமுவந்த அன்பளிப்பில் ஆலயம் வளர்ச்சியும், வடிவும் பெறத்தொடங்கியது. இவருடைய உதவியோடுதான ஆலயமுகப்பில் நாம் இன்று காண்கின்ற திறந்த மண்டபம் கட்டியெழுப்பப்பட்டது. இது கட்டப்பட்ட பின்னர், திருநாள் கால இடர்பாடுகள் பல தீர்க்கப்பட்டன. ஆலயம் அழகும் வளமும் வசதியும் பெறத் தொடங்கியது.

1974இல் கரம்பன் சுருவிலைச் சேர்ந்த திரு எஸ்.எம். மந்திரி என்பவரால ஆலயத்துக்குத தேவையான மின்சாரமும், மின்விளக்குகளும் அமைத்துக்கொடுக்கப்பட்ட போது ஆலயம் உண்மையிலேயே நிறைவு பெற்றது எனக் கூறலாம். வருடாந்தம் கொண்டாடப்பட்டு வந்த சாட்டி அன்னையின் திருவிழாவை செப்ரெம்பர் மாதத்தின் நான்காவது ஞாயிறு தினத்தில் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

1974ஆம் ஆண்டின் பின் பக்தர்கள் தொகை பெருகப்பெருக, சாட்டி அன்னை ஆலயமும பிரசித்திப பெறத் தொடங்கியது. ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில சாட்டி யாத்திரைத் தலம் பெரிதும் வளர்ச்சி கண்டது.

1980களின் ஆரம்பத்தில் றெஜிஸ் ராஜநாயகம் அடிகள் சாட்டி யாத்திரைத் தல பரிபாலகராக இருந்த காலத்தில் பல செயற்பாடுகள் இடம் பெற்றன. குருக்களின் இல்லத்தோடு கூடிய தங்குமடம் கட்டப்பட்டது. அன்னையின் சுருபத்தின் அருகே தரிசனம் வேண்டி வருபவர்களை ஒழுங்காகவும், அமைதியாகவும் செல்ல வழி செய்யும் வகையில் பலிபீடத்தைச் சுற்றி பக்தர்கள் சென்று அன்னையிடம் வேண்டிவர வழிசெய்யப்பட்டது. சாட்டி திருவிழாவோடு பாதுகாவலன், ஈழநாடு போன்ற பத்திரிகைகளில் விசேட கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டு, விழாக்கள் சிறப்பிக்கப்பட்டன. விசேட மலரும் வெளியிடப்பட்டது. சாட்டி யாத்திரைத்தல வாழ்த்து மடல்கள் அச்சிடப்பட்டு விற்பனைக்கு விடப்பட்டன. பக்தர்கள் அன்னையின் பதியிலிருந்து இவ் வாழ்த்துமடல்களை வாங்கித் தமது உறவினர், நண்பர்களுக்கு அன்போடு அனுப்பி வைத்தனர்.

தீவுப்பகுதியின் கத்தோலிக்கப் பிரதேசங்கலிருந்து மட்டுமல்ல, யாழ்.நகரின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சாட்டி அன்னையின் அருள் வேண்டி திருநாள் காலங்களில் வந்து தங்கிநின்று போகின்ற வழக்கம் நாட்டுப் பிரச்சினைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

1990களின் ஆரம்பத்தில் யாழ். கோட்டையைப் பிடிப்பதற்காக ஊர்காவற்றுறையில் தரை இறங்கிய படையினருடைய இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறை, கரம்பன், சுருவில் மக்கள் இடம் பெயர்ந்து வந்த போது ஏராளமானவர்கள் சாட்டி அன்னையிடமே தஞ்சமடைந்திருந்தனர். அந்த இராணுவ நடவடிக்கையின் போது சாட்டி அன்னையினுடைய ஆலயத்திலும், ஆலய வளாகத்திலும் மத வேறுபாடின்றி மக்கள் குழுமியிருந்த போது விமானப்படை கெலிக்கொப்டர் ஒன்று ஆலயத்தின் மேல் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டதால் பல உயிர்கள் ஆலயத்தினுள்ளே பறிக்கப்பட்டதுடன் ஆலயமும் சேதத்துக்குள்ளாக்கப்பட்டது.

**அருள்திரு.ரூபன் மரியாம்பிள்ளை**

இராணுவத்தினர் யாழ்.கோட்டையிலிருந்து திரும்பவும் ஊர்காவற்றுறையை நோக்கி நகர்ந்த பின்னர் சிறிதுகாலம் மக்கள் அங்கு வாழ்ந்தனர். எனினும் தீவுப் பகுதி மக்கள் எல்லோரும் நிரந்தரமாகவே வெளியேற வேண்டிய கட்டம் ஏற்பட்டது. சில ஆண்டுகளாக பக்தர்கள் இன்றி வெறிச் சோடிப் போய் இருந்த சாட்டி அன்னையாத் திரைத்தலம் 1995களின் பிற்பகுதியில் இராணுவத்தினர் யாழ்.நகரைக் கைப்பற்றிய பின்னரே பக்தர்கள் செல்லக்கூடிய ஓர் இடமாக மாறியது. நாட்டு நிலைமை காரணமாக பெரிய வசதிகள் செய்யப்பட முடியாமல் இருந்தாலும் திருநாள்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. மீண்டும் சாட்டி அன்னையின் பதியில் பக்தர்கள் பக்திப் பரவசத்தோடு குழுமத் தொடங்கினர். திருநாள் நிகழ்வுகளை நிறைவேற்ற சிறப்பு மேடை ஒன்று அமைக்கப்பட்டது.

2000ஆம் யூபிலி ஆண்டு கொண்டாட்டங்களில் மிக சிறப்புவாய்ந்ததாக அமையப்போகும் இப்பெருவிழாவில் தமிழ் மக்களதும், மண்ணினதும் நிலை கருதி விசேட வழிபாடுகள் நடத் தப்படுவது மிகவும் பொருத்தமானதே.

நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வினை எம் மண்ணுக்கும், மக்களுக்கும் சாட்டி அன்னையிடம் பரிந்து பேசவும், நாட்டின் சமாதானத்துக்காக செபிக்கவும் சாட்டி அன்னையின் பதியில் ஒன்றுகூடுவோம். ஒட்டுமொத்தமாக இலங்கை மண்வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் அமைதியும், சமாதானமும் நிறைந்த ஓர் எதிர்காலத்தை சாட்டி அன்னையிடம் வேண்டுவோம். ❖



சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன்
"மக்களால் மக்களை மக்களே ஆட்சி
செய்யும் சமஷ்டிக் கூட்டாட்சியில்
சமத்துவம் பேணி சந்திரிகா தலைமையில்
சமாதானம் கண்டிட"
வேல்முருகு தங்கராசா
தலைமையில் போட்டியிடும்
சுயேச்சைக்குழு இலக்கம் 03

எங்கள் சின்னம்
றெலிபோன்
TELEPHONE

உங்கள் புள்ளடி
X
(78212)

## அஷ்ரப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லிம்கள் மத்தியில் அதிக ஆதரவுள்ள போதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் ஹக்கீமுக்கே அதிக செல்வாக்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

கட்சிக்குள் தலைவர் அஷ்ரப்புக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும், நெருக்கமானவராகவும் இருந்தவர் ஹக்கீமே என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ)

## நேற்று நள்ளிரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர் அஷ்ரப்பின் மறைவுச் செய்தி வெளியானதும் நேற்று முற்பகல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அஷ்ரப்பின் இல்லத்துக்குச் சென்று தமது அனுதாபங்களைத் தெரிவித்தார். அமைச்சரின் வீட்டில் ஜனாதிபதி சுமார் 30 நிமிடநேரம் தங்கி இருந்தார்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் அஷ்ரப்பின் இல்லத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினர். (ஐ-5-7-14)


(78219)



ஒடுக்குமுறையோடு ஒத்துப்போகும் சமாதானமும்
அடிமைத்தனங்களை அனுசரிக்கும் அமைதியும்
எமக்குத் தேவையானவை அல்ல. நாம் விரும்புவது
எம் மக்கள் உரிமையோடு வாழக்கூடிய சூழலையும்
அதற்கான சுதந்திரத்தையுமே!

(ஈ.பி.டி.பி.)

வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!!


## ரிக்கெற் விநியோகம்

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கான விசேட கப்பல் சேவையில் பயணம் செய்வதற்கு நேற்று வரை 725 பேருக்குப் பயணச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விசேட கப்பல் சேவை எப்போது நடைபெறும் என்பது குறித்த அறிவிப்பு இன்று வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஹெலி விபத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீரற்ற காலநிலையினால் சிறிய குன்றின் முகட்டில் அமைச்சர் பயணம் செய்த ஹெலிக்கொப்டர் மோதி தீப்பிடித்து வெடித்துச் சிதறியதாகவும்-

- அமைச்சர் உட்பட ஹெலிக்கொப்டரில் இருந்த அனைவரும் கருகி மாண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஹெலிக்கொப்டர் மரம் ஒன்றுடன் மோதி தீப்பிடித்துக் கொண்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர் என்று கொழும்பில் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இவ்விபத்தில் உயிரிழந்த அனைவரது சடலங்களும் ஹெலிக்கொப்டர்களின் சிதைவுகளும் மோசமாக எரிந்து கருகிய நிலையில் விபத்து நடந்த இடத்தில் பரவலாகச் சிதறிக் கிடக்கக் காணப்பட்டதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

விபத்துக்குறித்து தகவல் கிடைத்ததும் அரணாயக்க பொலீஸார் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு விரைந்து சென்றனர். பாதையிலிருந்து ஒதுக்குப்புறமான இடத்தில் ஹெலிகொப்டர் சிதைவுகளும் சடலங்களும் காணப்பட்டதால் ஒரு சில கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்றே அவற்றை மீட்க வேண்டியிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அமைச்சரின் ஜனாஸா பிரேதப் பேழையில் வைக்கப்பட்டு உடனடியாகக் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டது.

இஸ்லாமியர்களின் வழக்கப்படி அமைச்சரின் ஜனாஸாவை தாமதமின்றி நேற்றிரவே நல்லடக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக முற்கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்று மாலைவரை - இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் - அமைச்சரின் ஜனாஸா உட்பட 11 பிரேதங்கள் மீட்கப்பட்டதாக இலங்கை வானொலி அறிவித்தது.

அரணாயக்கா, குமாரபுர, இடக்கந்த முதலிய - அருகருகே உள்ள - பிரதேசங்களில் ஹெலிக் கொப்டரின் சிதைவுகள் சிதறிக் கிடக்கக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (உ-5-7-14)


**BRIGHTMAN**
கல்வி நிலையம்
(நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக)
பிறவுண் றோட் - யாழ்.நகர்.

**A/L 2001**
**இணைந்த கணிதம்**
PURE : நேர்கோடு
APP. : மூட்டிய கோல்
ஆசிரியர் : திரு.ஐங்கரன்
ஆரம்பம் : 17.09.2000 Sun. 1 p.m.
(78474)


## குமார் நினைவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயன்படுத்தலாம் என்றும் இதன் விற்பனை மூலம் சேகரிக்கப்படும் நிதி கனேடிய பொதுஸ்தாபனங்கள் இரண்டுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றுள் வைத்திய உதவி நிதித் திட்டமும் ஒன்றாகும். முதல் நாள் விற்பனையில் கிடைத்த பணம் வைத்திய உதவி நிதிக்கே வழங்கப்படும் என்று தெரியவருகிறது.(அ-5)

## முஸ்லிம் பிரதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லும் மற்றும் பொது வைபவங்கள் சிலவற்றிலும் கலந்து கொள்வதற்காகவே அமைச்சர் அஷ்ரப் நேற்று கொழும்பில் இருந்து அம்பாறைக்குப் புறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அட்டாளைச்சேனை, பாலமுனை, ஒலுவில் ஆகிய இடங்களில் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அவர் உரையாற்ற இருந்தார். அமைச்சரின் மறைவுச் செய்தி அறிந்ததும் அந்தக் கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டன. கூட்ட மேடைகளும் அகற்றப்பட்டன.

இதேவேளை -

கொழும்பிலும் ஏனைய முக்கிய நகரங்களிலும் முஸ்லிம்கள் வாழும் இடங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. வாகனங்களிலும், பொதுக் கட்டடங்களிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் காணப்படுகின்றன. (ஐ-5-7-14)

## மிகக் குறுகிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
1981 செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அவர் ஸ்தாபித்தார். 1988 பெப்ரவரி 11 ஆம் திகதி அக்கட்சிக்கு அரசியல் கட்சி அந்தஸ்து கிடைத்தது.

1989இலும், 1994 இலும் பொதுத் தேர்தல்களில் வெற்றியீட்டிய அவர் 1994 தேர்தலின் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

1995 ஜூலை 6 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் வைத்து இவருக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சட்ட முதுமாணி பட்டத்தை வழங்கினார். பின்னர் அவர் ஜனாதிபதி சட்டத்தரணியாகவும் பதவி நிலைப்படுத்தப்பட்டார்.

முஸ்லிம் மக்களின் தனிப்பெரும் கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை வளர்த்தெடுத்தவர் அஷ்ரப். மிகக் குறுகிய காலத்தில் அரசியல் வானில் பிரகாசித்தவர்.

பல அரபு நாடுகளின் தலைவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் நட்புறவையும் பெற்றிருந்தார்.

மனைவியார் தேரியஸ் அஷ்ரப்பையும் மகன் அமான் அஷ்ரப்பையும் (வயது 25) பிரிந்து சென்றுள்ளார் அமைச்சர் அஷ்ரப். (உ)


பொ(F)லக் பல்பொருள் வாணிபம்
**FOLLOCK PALPORUL VANIPAM**
மொத்த விற்பனையாளர்கள்
வாடிக்கையாளர்களே!
உங்களுக்குத் தேவையான அலுமினியம், எவர்சில்வர், பிளாஸ்ரிக் பொருள்களை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள நீங்கள் இன்று முதல் நாடவேண்டிய இடம்:
பொ(F)லக் பல்பொருள் வாணிபம்
அலன் அலுமினிய இண்டஸ்றீஸ்
No.265, Manipay Road, Jaffna.
இல. 265, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(78455)


# கொழும்பில் நேற்று முதல் விசேட பாதுகாப்புத் திட்டம்

கொழும்பு,செப்.17

கொழும்பு நகரம் மற்றும் அதனைச்சுற்றியுள்ள பகுதிகளுக்கென நேற்று முதல் விசேட பாதுகாப்புத் திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்புப் பகுதிக்கான பிரதிப் பொலீஸ்மா அதிபர் போதிலியனகே தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள 19 பொலீஸ் பிரிவுகளிலும் 30 மோட்டார் போக்குவரத்துக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுக்கள் 24 மணி நேரமும் வீதி ரோந்துப்பணியில் ஈடுபடும்.

இதேவேளை -

அவசர அழைப்பு பொலீஸ் வாகனங்களின் எண்ணிக்கை 20இல் இருந்து 30ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனைவிட கொழும்பு நகரில் முக்கிய இடங்களில் புதிய 25 வீதித் தடுப்புச்சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொலீஸாருக்கான விடுமுறைகள் யாவும் தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இப்படி பொலீஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)




ஐஸ் கிறீம் பிரியர்களே!
உங்கள் பணத்திற்குப் பெறுமதியான ஐஸ்கிறீமை நிறைவாகத் தருவது சுவை மிக்க பெரிய மவுண்ரன் ஐஸ் கோண்களே!
மவுண்ரன் ஐஸ் கோண்
102, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(C/12966)

கணபதி துணை
ஏழாலை செந்தமிழ் கலை மன்றம்
யாழ் நகரில்........
தனித்துவமான இசைகளின் சங்கமத்தில்
உயிரிசை
(கவிதை ஒலிநாடா)
வெளியீட்டு விழா அழைப்பு
இடம் : யா/ இராமநாதன் கல்லூரி மண்டபம்
காலம் : இன்று (17.09.2000) ஞாயிறு காலை 9.30 (மு.நே)
தலைவர் : கவிஞர் கலாநிதி உயர்திரு இ.முருகையன் அவர்கள்
உயிரிசை உருவாக்கம் : கு.றஜீபன்
இசைவார்ப்பு : கு.அற்புதன்
※ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ※
விளம்பர அன்பளிப்பு:
தங்க ஆபரணங்களின் சங்கமம்
சிறீ துர்க்கா நகை மாடம்
188, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(78470)


## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு குமாரவேல்பிள்ளை

கொல்லன்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை சித்தியார் வளவை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு குமாரவேல்பிள்ளை நேற்று (16.09.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் புனிதவதியின் அன்புக் கணவரும், கமலவதனி, சகுந்தலா மற்றும் நளினி (மாணவிகள் யூனியன் கல்லூரி), பாலகுமாரன் (கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.09.2000) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கம்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
புனிதவதி (மனைவி)
ஸ்ரீஸ்கந்தராசா (மைத்துனர்)

வித்தியார் வளவு,
கந்தரோடை,
சுன்னாகம்.
(C/12965)




த.சுசித்திரன் (றொபேட்)
இல. - 03

தமிழ் மக்களின் வாழ்வில்
சுபீட்சமான எதிர்காலத்துக்காகவும்
சுதந்திரத்துக்காகவும் புனர்நிர்மாணத்துக்காகவும்
புதிய மிலேனியத்தை சிருஷ்டிப்பதற்கும்-
தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்

சுயேச்சைக் குழு - 02 X



அ.வரதராஜப்பெருமாள்
இல. - 01
(78222)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.09.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.